JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா

06 AUG 2014


## அனுதினமும்

2014 ஒகஸ்ட்



"கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை
வைத்து நித்திரையாயிருந்தார்.
அவர்கள் அவரை எழுப்பி:
போதகரே, நாங்கள் மடிந்து போகிறது
உமக்குக் கவலையில்லையா என்றார்கள்."
(பரி: மாற்கு 4:38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அட்டைப்பட விளக்கம்

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இம்முறை ஜீவ மன்னா தின தியானங்களில் அட்டைப் படத்தில் காணப்படுகின்றதென்னவெனின் இயேசுகிறிஸ்து படகில் பயணம் செல்கையில் படகில் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். இந்த சந்தர்ப்பத்தைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் பரி.மத்தேயு, பரி.மாற்கு, பரி.லூக்கா ஆகிய நற்செய்தி புத்தகங்கள் மூன்றிலும் எழுதப்பட்டுள்ளது. அப்படியானால் பரி.மத்தேயு 8:23 - 27 வரைக்கும், பரி.மாற்கு 4:35 - 41 வரைக்கும் பரி.லூக்கா 8:22 - 25 வரைக்குமாகும். ஒரு நாள் நான் பரி.மாற்கு புத்தகத்தில் 4வது அதிகாரத்தின் 38வது வசனத்தை வாசித்துக் கொண்டிருக்கையில் இந்த நிகழ்வு சம்பந்தமாக ஆத்மீக கருத்துக்கள் பலவற்றை தேவ ஆவியானவர் வெளிப்படுத்தினார். அந்த தேவ வசனத்தில் எழுதியிருப்பதாவது "தேவன் படகின் பின்னணியத்தில் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார்." அவர்கள் அவரை எழுப்பி: போதகரே நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா? என்றார்கள். இயேசு அப்படியாக நித்திரை செய்துக் கொண்டிருந்தது, படகில் பயணம் செல்கையில் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவரும் இயேசுவுடன் உரையாடவில்லை என்பதாகும். ஆகையால் சுழல் காற்று உண்டாகியதன் பின்னர் அவர்களது வாழ்க்கையை மீட்டுக் கொள்ள அழுது புலம்ப வேண்டியதாக இருந்தது.

தேவ பிள்ளைகளே! நீங்கள் ஆத்மீக பிள்ளையானபடியால் எப்போதும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்ய வேண்டும் அனைத்து இலங்கை வாழ் மக்களின் மத்தியில் உங்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியாத உன்னத வாழ்வை பெற்றுக் கொடுக்கும் பெரும் வரப்பிரசாதத்தை தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ளார். நீங்கள் ஆத்மீக பிள்ளையான பின்னர் நீங்கள் ஆத்மீக பிள்ளையென எண்ணி திருப்தியடைந்து விடாதீர்கள். தேவனை நோக்கி ஜெபித்து எல்லா வேளையிலும் தேவனைத் தேடுங்கள். உங்கள் ஜெபம் என்பது இயேசுவோடு உரையாடுவதேயாகும்.

அன்று பன்னிரண்டு சீஷர்கள் போன்று இருக்காது தேவனை நோக்கி விழித்திருந்து செய்யுங்கள். அப்பொழுது ஏதாகிலும் பிரச்சினை உங்களுக்கு ஏற்படும் போது அவர்கள் அன்று அழுது அங்கலாய்த்தது போல அழுவதற்கு அவசியமேற்படாது ஏனென்றால் உங்கள் பிரச்சினை ஆரம்பிப்பதற்கு முன்னரே தேவன் அதை உங்களுக்கு வெளிப்படுத்துவார். அத்தோடு அதிலிருந்து மீளவும் வழி சொல்லிக் கொடுப்பார். இல்லாவிடின் பிரச்சினை சிறிதாக ஆரம்பிக்கும் போதே அதை தீர்த்து வைத்து விடுவார்.

**உங்கள் ஆத்மீக வாழ்க்கைக்கு இதற்கூடாக ஏதாவதொன்றை கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் தேவனை விழித்திருந்து இராப்பகலாக தேடுங்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கே

## ஆசிரியர் உரை

தேவ பிள்ளைகளே,

### நாம் கர்த்தருடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்கள்!

இயேசுக்கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள். எமது 35வது வெளியீட்டையும் தயாரித்து உங்கள் கரங்களில் கிடைக்கும் வரை வழி நடத்திய தேவனின் மகாப்பெரிய அநுக்கிரகத்திற்காக முழு உள்ளத்தோடு நன்றி கூறுகின்றேன். ஜீவமன்னா தினத்தியானங்களை கால தாமதமின்றி வெளியீட்டுக்காரியங்களை செய்து முடிக்க பொருளாதார வசதிகளை சந்திப்பதாலும் தேவனுக்கே கோடானகோடி ஸ்தோத்திரங்கள்.

இயேசுக்கிறிஸ்து விடுதலையின் சுவிஷேசத்தை அறிவிக்கும் படியே இவ்வுலகில் மனிதனாக அவதரித்தார். இந்த விடுதலையின் சுவிஷேசமானது ஒரு மனிதனை அவனது எல்லாக் கட்டுக்களினின்றும் விடுதலையாக்குகின்றது. மனிதனானவன் விபச்சார வாழ்க்கையினின்று , சூதாட்ட பழக்கத்தினின்று , மதுபோதையினின்று , பலவித பாவப்பழக்க அடிமைத்தனங்களினின்று தானே வெளியில் வர முயற்சி செய்கின்றபோது சாத்தான் விடுவதில்லை. இந்நிலையில் சாத்தானுடைய கையிலிருந்தும் , பாதாளத்தின் வல்லமையிலிருந்தும் நித்திய ஆக்கினையான நரகத்திலிருந்தும் விடுவிப்பது இயேசுவின் விடுதலை சுவிஷேசமாகும். அப்போஸ்தலரான பவுல் எவ்வளவோ பாடுகளின் மத்தியிலும் சுவீஷேசத்தை அறிவித்துக் கொண்டேயிருந்தார். ஏசாயா 61:1ல் இயேசுவின் சுவிஷேச பணியைக் குறித்து இவ்வாறாக எழுதப்பட்டுள்ளது. சிறுமைப்பட்டவர்களுக்கு சவிஷேசத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொருங்குண்டவர்களுக்கு காயங்கட்டுதலையும்,சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையும் , கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலையும் கூறவும் என்றாகும்.

என் அன்பான தேவபிள்ளைகளே! எமது பணியும் இன்று இவ்வாறாக அமைய வேண்டும். நாங்கள் கர்த்தருடைய மகிமைக்கென்று நாட்டின் நீதியின் விருட்சங்களாக எழும்பிட வேண்டும். இயேசுக்கிறிஸ்து எமக்கு நித்திய மகிழ்ச்சியை பெற்றுக்கொள்ளும் படியான வழிகளை எமது முன்னே வைத்துள்ளார். ஆகையால் சந்தோஷம் சமாதானம் சுகம் பெற நாம் தவித்துக்கொண்டிருக்க அவசியமில்லை. எமது தினமன்னா தியானங்களுக்கூடாக நீங்கள் ஒவ்வொரு நாளும் புதிய பெலனை பெற்றுக்கொள்ளுங்கள். இயேசுவுக்காய் ஒரு நாளைக்கு ஒரு ஆத்துமாவையாவது ஆதாயப்படுத்துங்கள். அநேகமாக துயரப்படுகிறவர்களை சந்தியுங்கள். உங்கள் ஆத்துமீக பயணம் வெற்றியோடு முன்னோக்கி செல்ல வேண்டுமென ஜெபிக்கின்றேன். பொருளாதார ரீதியிலும் உங்கள் ஒத்தாசையை நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இயேசுக்கிறிஸ்துவின் கிருபையானது உங்களை அனுதினமும் வழிநடத்துவதாக!

***ஆவிக்குரிய வாழ்வில் வளர,***
***ஆத்துமாவில் பெலன் கொள்ள,***
***நித்திய மகிழ்ச்சியை பெற,***
***நீதியின் விருட்சங்களாக***
***நித்தமும் எழும்பிடுங்கள்!***

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவுக்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
***இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்***

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஓகஸ்ட் 01
வெள்ளி

**தேவ வசனத்தின்படி வாழ்கின்ற உங்கள் ஆயுட்காலத்தை நீடிக்கும் தேவன்!**

இன்றைய வேதவாசிப்பு
ஓசியா
அதி: 11 – 12

"நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்." (சங்கீதம் 91:16)

அன்பார்ந்த பிள்ளைகளே! தேவனுடைய **காருண்யத்தினால் இன்றைய நாளில் புதிதான கிருபையைப் பெற்று மகிழ்ந்திருக்கும்படியாய் வாழ்த்துகின்றேன்.** மாதத்தின் முதல் நாளான இன்று தேவன் தாமே மாதம் முழுவதுமே உங்களைக் **கண்ணின் மணியாகக் காத்துக்**கொள்ளும்படியாக ஜெபிக்கிறேன். இவ்வுலகில் வாழ்கின்ற மனிதர்களில் பொரும்பாலானோர் பலவிதமான நோய்கள் காரணமாக **வேதனைப்படுகிறார்கள்.** சில சந்தர்ப்பங்களில் சரியான மருத்துவ பரிகாரம் பெற்றுக் கொள்ளவும் பொருளாதாரக குறைபாடுகள் இருப்பதனால் அவர்களின் **நோய்க்குரிய சிகிச்சைகளையும், பரிகாரங்களையும்** பெற்றுக்கொள்ள முடியாதிருக்கிறார்கள். சில நோய்களுக்கு வைத்திய பரிகாரங்களை இன்னும் கண்டுபிடிக்காமையும் மனிதர்களை அகால மரணத்திற்குட்படுத்துகின்றது. அப்படியில்லாவிட்டால் பிரச்சினைகள் உபத்திரவங்களினால் **மனங்கலங்கி** தாங்க முடியாத வேதனையால் தற்கொலை செய்து வாழ்வை **வீணாக்கிக்** கொள்ளும் அநேக சந்தர்ப்பங்களும் உண்டு.

தேவ பிள்ளைகளே! ஆனாலும் கலங்காதிருங்கள் இன்றைய நாளில் இந்த **ஜீவ மன்னா தின மன்னா தியானங்களுக்கூடாக,** தேவ செய்தியை வாசிக்கும் நீங்கள் **மிகவும் அதிரஷ்டக்காரர்களாவீர்கள்.** முதன் முதலாக இத்தியானங்களை வாசிப்பவராக இருப்பினும் உங்களை உருவாக்கிய தேவ பிதாவைக் குறித்து நீங்கள் இன்றைய நாளில் இந்த **ஜீவ மன்னா தியானங்களை வாசிக்கும் நீங்கள் மிகவும் அதிரஷ்டக்காரர்களாவீர்கள்.** முதன் முதலாக இத்தியானங்களை வாசிப்பவராக விருப்பினும் உங்களை உருவாக்கிய தேவ பிதாவைக் குறித்து நீங்களும் இன்றைய நாளில் அறிந்துக் கொள்கிறபடியால் **அதிரஷ்டக்காரர்களே!** இன்று உங்கள் வாழ்வை உங்களைப் படைத்த பிதாவிடம் **ஒப்புக்கொடுங்கள்.** தேவன் உங்கள் வாழ்வில், **சுகம், சந்தோஷம், சமாதானத்தைக்** கொடுத்து நீடித்த ஆயுளைத் தருவார். உங்கள் வாழ்வில் நீங்கள் **முகங்கொடுக்க** வேண்டிய **பிரச்சினைகள், உபத்திரவங்கள்** காரணமாக இவ்வுலக வாழ்க்கை வேண்டாமென்று மனவிரக்தியோடு இருப்பீர்களாயின் தேவன் உங்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள அனைத்து **மனவிரக்தியை** நிர்மூலப்படுத்தி உங்கள் வாழ்வைக்குறித்து புது எதிர்பார்ப்பை உருவாக்கித் தருவார். உங்கள் வாழ்வை **புது பாதையில் கொண்டு செல்வாராக!** தேவனானவர் மனிதனுக்கு கொடுத்துள்ள நீடிய ஆயுளைப் அனுபவிக்கும் முகமாக தேவன் உங்களை **ஆசீர்வதிப்பாராக!**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் நீங்கள் **கலங்காதிருங்கள்! ஏசாயா 46:4இல் உங்கள் முதிர வயது வரைக்கும் நான் அப்படிச் செய்வேன்.** நரை வயது மட்டும் நான் **உங்களைத் தாங்குவேன்.** நான் அப்படிச் செய்து வந்தேன். இனி மேலும் **நான் ஏந்துவேன். நான் சுமப்பேன், தப்புவிப்பேன்** என **பொருத்தனை பண்ணியுள்ளார்.** அவரது வார்த்தை ஒரு போதும் மாறாது. நீங்கள் முழு உள்ளத்தோடு உங்கள் சிருஷ்டிப்பின் தேவன் பேரில் **விசுவாசங்கொண்டு,** உங்கள் முழு வாழ்வையும் தேவனுக்கே **அர்ப்பணித்து** தினந்தோறும் ஜெபத்துடன் அவரது முகத்தைத் தேடுங்கள். தேவன் தாமே உங்களுக்கு நீடித்த ஆயுளைத் தந்து **ஆசீர்வதிப்பாராக! வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனது சிருஷ்டிப்பின் தேவன். ஆகையால் எனது வாழ்வை உங்களுக்கு அர்ப்பணிக்கின்றேன். எனக்குக் கொடுத்த ஆயுட்காலத்தை அனுபவிக்க என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என் மகனே, கேள், என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்; அப்பொழுது உன் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும்." (நீதிமொழிகள் 4:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்ற காலத்தில் மழையைப் பெய்யப் பண்ணும் உங்கள் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
ஓசியா
அதி: 13 – 14

**"நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்."** (எசக்கியேல் 34:26)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் புதிய கிருபை நிறைந்த ஒரு ஆசீர்வாதத்தின் நாளைப் பெற்றுக்கொண்டமைக்காக உங்களை வாழ்த்துகின்றேன்.** எங்களை உருவாக்கிய தேவன் இயற்கைக்கூடாகவும், அவர் சிருஷ்டித்த பிள்ளைகளுக்கு நன்மையானவைகளை நிகழ்த்துகின்ற தேவனாவார். ஏனென்றால் மனிதனை ஆசீர்வதிக்கும் முகமாக **பூமியின் மேல் மழையை பெய்விக்கும் தேவனாவார். உபாகமம் 28:12**இல் ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச் செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும் கர்த்தர் உனக்குத் தமது **பொக்கிஷசாலையாகிய** வானத்தைத் திறப்பார்.

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் **எசக்கியேல் 34:26**இல் பிரதான வசனம் "**நான் அவர்களையும், என் மேட்டின் சுற்றுப்புறங்களையும், ஆசீர்வாதமாக்கி ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப் பண்ணுவேன்**" ஆசீர்வாதமான மழை பெய்யும் என்பதாக வெளிப்படுத்துகின்றது. உங்களை இவ்வளவாக **நேசிக்கின்ற, பராமரிக்கின்ற** தேவனைப் பற்றி தெரிந்துக் கொண்ட நீங்கள் **அதிரஷ்டக்காரர்கள்** அல்லவா? இவ்வுலகில் மண்ணினால் உருவாக்கப்பட்ட மனிதனைக் குறித்து இவ்வளவு உயர்வாகக் கருதி அவர்கள் **அருமையானவர்களென** ஏற்றுக் கொள்ளவும் நாங்கள் அவருக்கு எதைக் கொடுத்துள்ளோம்? **என சற்று சிந்தித்துப் பாருங்கள்.** எங்களிடமிருந்து எதனையுமே பெற்றுக் கொள்ளாத, அனைத்தையும் எங்களுக்குத் தருகின்ற தேவ பிதாவானவர் மிகவும் அன்பான தேவன் என்பதால் தேவனைத் தவிர மனிதனது நன்மையைக் குறித்து செயலாற்றும் வேறொரு மனிதன் இல்லையென விசுவாசிக்கின்றேன். நீங்களும் அப்படியே என நினைக்கின்றேன். ஆகையால் எவ்விதமான **காரியங்களையும் நினைத்து கலங்காதிருங்கள்!** உங்கள் சிந்தைனைகள் எவ்வளவு பெரிய அளவில் அதிகமாகவிருப்பினும் அனைத்தையும் தேவன் நன்கு **அறிந்தவராகவிருக்கின்றார்!**

தேவ பிள்ளைகளே! **உங்கள் விண்ணப்பத்திற்கு** முதலே உங்கள் உள்ளத்தில் உருவான சிந்தனைக்கு தேவன் **ஆசீர்வதிக்க வல்லவராயும், ஆசீர்வதித்து** அதை **நடைமுறைப்படுத்தவும்** கிரியை செய்கின்றார். ஆகையால் உங்கள் வாழ்வில் இருக்கின்ற எல்லாக் காரணங்களையும் தேவன் பேரில் வைத்து எவ்வித **சுமையும்** இல்லாத மனிதனாக உங்களை **ஆயத்தப்படுத்திக்** கொள்ளுங்கள். ஏற்றக்காலத்தில் தேவனது **ஆசீர்வாதமான மழையை உங்கள் மீது பொழியச் செய்வார்.** இன்று ஆசீர்வாதத்தோடு கூடிய **வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் என்னை ஆசீர்வதித்து ஏற்றகாலத்தில் மழையைப் பெய்விக்கப் பண்ணுகின்றபடியால் உங்களுக்கு ஸ்தோத்திரம். உங்கள் பரலோக ஆசீர்வாத பொக்கிஷசாலையைத் திறந்து ஆசீர்வாத மழையை அனுப்புங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்." (பரி:மத்தேயு 6:8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஓகஸ்ட் 03 ஞாயிறு

## உங்களை அக்கினிச் சூளையினின்று காப்பாற்றி நித்திய ஜீவனைக் கொடுக்கும் இயேசுகிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு

யோவேல் அதி: 01 – 02

**"ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்."** (வெளி:20:15)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் இன்றைய புதிய நாளில் மனநிறைவும், மகிழ்ச்சியும் பெற்று வளமுடன் வாழுமாறு வாழ்த்துகின்றேன்.** இவ்வுலகில் வாழ்கின்ற பெரும்பாலான மனிதர்கள் அவர்களது வாழ்க்கையில் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்ளும்படியாக **அதிகமாக பாடுகளை அனுபவிக்கின்றதோடு மரணத்தின் பின்பு** அவர்களது ஆத்துமாவிற்கு நேரிடுவதென்ன என்று அவர்களுக்கு நினைக்கவும் சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை.

தேவ பிள்ளைகளே! ஒவ்வொருவரது ஆத்துமாவிற்கும் பரலோக இராஜ்ஜியத்திலே **நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள முடியும்** எனக் கூறுவோமானால் அவர்கள் **எவ்வளவாக விசுவாசிப்பார்கள்** என்பதை **நானறியேன்.** அவர்கள் வாழ்வில் பலவிதமான கொள்கைகள், காரணங்கள் என்பனவற்றால் அவர்களது பூமிக்குரிய வாழ்வில் அவர்களுக்கு **பதில் , விடுதலை கிடைக்காமல் அலைந்துக் கொண்டிருக்கின்றார்கள்.** சில வேளைகளில் நிரந்தர வேலை, பிள்ளைகளது உயர்கல்வி, அவர்களது எதிர்காலம், அல்லது சொந்த வீடு, நிரந்தரமாக ஊதியம் பெறும்படியாக, இவைகளில் நிமித்தமாக என்ன செய்வது என்று நினைத்துக் கொண்டிருக்க முடியும். இவ்வளவு பிரச்சினைகளின் நிமித்தம் மனிதனானவன் வாழ்ந்துக் கொண்டிருக்கும் போது தனது **மரணத்தின் பின்னர் ஆத்துமாவிற்கு என்ன நடக்கும்?** என்பதனை சிந்திக்க அவர்களுக்கு நேரம், காலம் இல்லை என்றே கூறலாம்.

தேவ பிள்ளைகளே! நீங்கள் கலங்காதிருங்கள்! நீங்கள் இவ்வுலகில் வாழ்வது **கொஞ்சக்காலமே** என்பதனை அறிந்துக் கொண்டிருப்பதனால், இப் பூமியில் வாழ்கின்ற குறுகிய காலத்திற்குள் நீங்கள் அனுபவிக்கின்ற இவ் வாழ்விற்கு மேலாக உங்கள் **ஆத்துமா நித்தியமாய்** சென்றடையும் இடத்திற்கு **உங்கள் உள்ளத்தை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.** நீங்கள் அனுபவிக்கும் இத்துன்பங்கள் மிகக் கொஞ்ச காலமேயென்பதால் **கலங்காதிருங்கள்!** உங்கள் மரணத்தின் பின்பு உங்கள் ஆத்துமாவானது சதாகாலமும் வேதனைப்பட அக்கினி கடலுக்கு போக வேண்டுமா? என்று சிந்தித்துப் பாருங்கள். மனிதனது ஆத்துமாவிற்கு நித்திய ஜீவனைப் பெற்றுத் தர இயேசுவால் மாத்திரமே முடியும். உங்களுக்கு **நித்திய ஜீவனை தர இயேசுகிறிஸ்து எப்பொழுதுமே ஆயத்தமாகவே இருக்கின்றார்.** நீங்கள் அவர் பேரில் **விசுவாசங் கொண்டு** அவரோடு சமீபித்து வாழ்கின்ற போது பரலோகத்தில் **ஜீவ புத்தகத்தில்** உங்கள் பெயர் குறிப்பிட்டு **நித்திய ஜீவனுக்கு உரிமையுடையவராகிவிடுவீர்கள்.** ஆகையால் உங்கள் ஆத்துமாவை நரக அக்கினியிலிருந்து மீட்டுக்கொண்ட இயேசுகிறிஸ்துவுக்குள் சந்தோஷமாக வாழுங்கள். இயேசுகிறிஸ்துவுக்குள்ளாக அவர் நடந்து வந்த பாதையில் சென்று நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளுங்கள். **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் ஒரே பேரான இயேசுகிறிஸ்துவுக் கூடாக என் ஆத்துமாவை நீங்கள் நரகாக்கினியின்று காத்துக் கொண்டமையால் ஸ்தோத்திரம். எனது இந்த வாழ்க்கை மாத்திரமல்ல, என்னுடைய ஆத்துமாவானது சதாகால ஜீவனைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கின்றேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்."
(பரி:மத்தேயு 13:41,42)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் **04** திங்கள்

# எம்மீது குற்றஞ் சுமத்துபவர்கள் தேவனுக்கு முன்னால் நிலையற்றுப் போவார்கள் !

இன்றைய வேதவாசிப்பு

யோவேல் 03
ஆமோஸ் 01

**"இதோ, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? இதோ, அவர்கள் எல்லாரும் ஒரு வஸ்திரத்தைப்போலப்பழசாவார்கள்; பொட்டுப்பூச்சி அவர்களை அரிக்கும்."** (ஏசாயா 50:9 )

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் சந்தோஷம் உங்கள் வாழ்வில் நிறைந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.*** ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவை அறிந்துக் கொள்ளாத, தேவனுக்கு தனது உள்ளத்தை அளிக்காத மனிதர்கள் தங்கள் வாழ்வை ***வீணாகக் கழிக்கின்றார்கள் என்பதும்,*** அவர்கள் வாழ்க்கை முழுவதும் பாலைவனத்தின் கானல் நீருக்கு பின்னாலேயே செல்கிறார்கள் என்பதனை எங்கள் ***ஆத்மீகக் கண்களால் காணமுடிகிறது.*** ஆனால் அவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது நீங்களும், நானும் எவ்வளவு ***அதிரஷ்டக்காரர்கள்*** என எண்ணுகின்றேன்.

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளிலும் தேவன் எமக்கு உரைப்பது என்னவென்றால் தேவனாகிய ஆண்டவர் எமக்குத் துணை செய்கிறபடியால், யாராலும் எம்மை ***ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க முடியாதென்பதையேயாகும்.*** ஏனென்றால் இதோ கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணை செய்கிறார். என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? என தேவ வசனத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகையால் உங்களுக்கு ***விரோதமாக செயற்படுபவர்களை*** குறை கூறுபவர்களை குறித்து ***பயப்படாதீர்கள்.*** ஆத்மீக பிள்ளைகளை பாவத்தில் விழ வைத்து வாழ்வை வீணாக்கும்படியாக ***சாத்தான்*** எல்லா வேளைகளிலும் ***உபாயங்களை*** செய்துக்கொண்டிருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. ***பிசாசானவன்*** ஆத்மீக பிள்ளைகளுக்கு கூடாக, அல்லது ஆத்மீகமற்ற பெயரளவில் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகின்ற பிள்ளைகளுக்கூடாக, உலகத்தவர்களாக வாழும் பிள்ளைகளுக்கூடாக உங்களுக்கும், எனக்கும் ***குற்றஞ்சாட்டுவதற்கு*** முழு முயற்சியோடு செயல்படுவான். நீங்களும், நானும் மாசற்ற நல் மனசாட்சியுடையவர்களாய் ஜீவிக்கின்ற போதும் எப்பொழுதும் உங்களையும், என்னையும் குறித்து பொல்லாப்புகளை பேசி, குறைபாடுகளை சுமத்தி, எம்மை ***குற்றவாளியென்று*** அனைவருக்கும் பகிரங்கப்படுத்துவதற்கு ***முயற்சிப்பான்.***

தேவ பிள்ளைகளே! அப்படியாயினும் நீங்கள் மனங்கலங்காதிருங்கள்,ஏனெனில் கர்த்தராகிய தேவன் ***புறம்பே தள்ளி விடுவதாக*** பிரதான தேவ வசனத்தில் கூறுகின்றார். ***"அவர்கள் எல்லாரும் ஒரு வஸ்திரத்தைப் போல பழசாவார்கள், பொட்டுப் பூச்சி அவர்களை அரிக்கும்"*** என அங்கே எழுதப்பட்டுள்ளது. ஆகையால் உங்கள் ***உள்ளத்தை அதைரியப்படுத்திக் கொள்ளாதீர்கள்.*** நீங்கள் இன்னுமாக ***தேவனைக்கிட்டிச் சேர்ந்து ஜீவியுங்கள்.*** தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக! அப்பொழுது தேவ பயமில்லாது உங்கள் மீது குற்றஞ் சுமத்துபவர்களுக்கு தேவன் பிரதிபலன் கொடுப்பார். **1 பேதரு 3:9**இல் சொல்லப்பட்டுள்ளவாறு ***"தீமைக்கு தீமையையும், உதாசனத்திற்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல் அனைத்தையும் தேவனுடைய கரங்களில் ஒப்படைத்து ஜெபத்திலே தரித்திருங்கள்." வெற்றிச்சிறந்த நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! எனது எதிராளியான சாத்தான் மனிதர்கள் மூலமாக எப்பொழுதும் என்னை குற்றஞ் சுமத்த முயற்சி செய்துக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனாலும் இன்றைய தேவ வசனத்தைப் போன்று நீங்கள் என்னோடிருந்து அவர்களின் செயல்களை அகற்றி விடுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர்; அவர்களை ஆக்கினையில்லாமல் தப்புவிக்கமாட்டார்;..." (நாகூம் 1:3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஜீவ மன்னா<br>ஒகஸ்ட் 05<br>செவ்வாய் | இயேசுகிறிஸ்து எதிர்பார்ப்பது உங்கள் நன்றியுள்ள அன்பான உள்ளத்தையே ! | இன்றைய வேதவாசிப்பு<br>ஆமோஸ்<br>அதி: 02 – 03 |

**"கர்த்தர் என்னை இரட்சிக்கவந்தார்; ஆகையால் எங்கள் ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப் பாடுவோம் என்று எழுதிவைத்தான்."** (ஏசாயா 38:20)

தேவ அன்பினால் இணைந்த எனது **தேவ பிள்ளைகளே! இன்றைய நாளிலும் தேவ அன்பினால் நிறைந்து மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** தேவ பிதா பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற ஜீவிக்கின்ற தேவனாவார். நீங்களும், நானும் **விண்ணப்பிக்கின்ற** போது தேவன் தேவ குமாரனுக்கூடாக அவரது நாமத்தை மகிமைப்படுத்தும் பொருட்டு எங்கள் **வேண்டுதல்களை நிறைவேற்றுவார்.**

தேவ பிள்ளைகளே! எங்கள் சிருஷ்டிப்பின் தேவனானவர் எங்களிடம் எதிர்பார்ப்பது எங்களது **நன்றியுள்ள உள்ளத்தை** மாத்திரமேயாகும். ஏனென்றால் எல்லாருக்கும் **ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும்** கொடுக்கிற அவர் நமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை, என **அப்போஸ்தலர் 17:25** இல் எழுதப்பட்டுள்ளது. ஆனாலும் என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா என **நீதிமொழிகள் 23:26**இல் கூறப்பட்டுள்ளது. தேவன் எமது செய்நன்றி மறவாத உள்ளத்தையும், அன்புமிகுந்த உள்ளத்தையும் தேவன் எம்மிடம் எதிர்பார்க்கிறார். யூதாவின் **இராஜாவாகிய எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்.** ஏசாயா தீர்க்கதரிசியிடம் கர்த்தர் நீர் பிழைக்கமாட்டீர் மரித்துப் போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் எனக் கூறி அனுப்புகிறார். அதைக் கேட்ட எசேக்கியா ராஜா தேவனுக்கு விண்ணப்பம் பண்ணி மிகவும் அழுதான். கர்த்தர் மீண்டுமாக ஏசாயா எனும் தீர்க்கதரிசியிடம் உன் **கண்ணீரைக் கண்டேன்.** இதோ உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன் என்று கூறி அனுப்பினார். அது அப்படியே நிறைவேறியது.

தேவ பிள்ளைகளே! யூதாவின் இராஜாவாகிய எசேக்கியா வியாதிப்பட்டு தன் **வியாதி நீங்கிச் சொஸ்தமான போது** இரட்சிப்பின் பாடலைப் பாடி எங்கள் ஜீவ நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீத வாத்தியங்களை வாசித்துப் பாடுவோம் என்று எழுதி வைத்தான். ஆனாலும் சில தினங்களில் அவனுக்கு கர்த்தர் **கொடுத்த சுகத்தை மறந்து விட்டான்.** அதன் பிறகு **பாபிலோனின் இராஜாவான மெரோதாக் பலாதான்** எசேக்கியா இராஜா ஆரோக்கியமானதைக் கேள்விப்பட்டு அவனிடத்திற்கு **நிருபங்களையும், வெகுமானத்தையும்** அனுப்பினான். அவன் தான் பெற்ற சுகத்தை அறிவிக்காதபடி தன் மாளிகையில் காணப்பட்ட **அனைத்து பொக்கிஷங்களையும் காண்பித்தான்.** தன் அரமனையிலும், தன் ராஜ்ஜியத்தில் எங்கும் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றுமில்லையென வேதாகமம் கூறுகிறது. ஆனாலும் **நீங்கள் அப்படிச் செய்யாதீர்கள்.** நீங்கள் நன்றியுள்ள உள்ளத்தோடு ஜீவித்து சதாகால ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். **வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

தேவனே என்னுடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை எனக்குத் கொடுத்தமைக்காக ஸ்தோத்தரிக்கின்றேன். என் இரட்சிப்பின் கன்மலையே நன்றி! எனது பிரச்சினை, வியாதி, போராட்டங்களை நீக்க நீங்களே வல்லவர். நன்றியுள்ள உள்ளத்தோடு வாழ உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"என் நாமத்தினிமித்தம் என் கோபத்தை நிறுத்திவைத்தேன்; உன்னைச் சங்கரிக்காதபடிக்கு நான் என் புகழ்ச்சியினிமித்தம் உன்மேல் பொறுமையாயிருப்பேன்." (ஏசாயா 48:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் **06**

புதன்

**உங்களுக்குள் கிரியை செய்யும் தேவ வல்லமையால் சத்துருவானவனை மேற்கொள்ளுங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு

ஆமோஸ் அதி: 04 – 05

**"இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது."**
(லூக்கா 10:19)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இனிமையான நாளைப் பெற்ற சமாதானத்துடன் வாழும்படியாக வாழ்த்துகின்றேன்.*** உலகில் வாழும் அனைத்து மனித இனத்தவர்களிடையே நீங்கள் ***மிகவும் அதிர்ஷ்டக்காரர்கள்*** ஆவீர்கள். ஏனென்றால் ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளமையால் நீங்கள் ***விஷேசித்தவர்களாவீர்கள்.*** அது மாத்திரமல்ல, உங்களுக்கு ***ஆத்மீக, லௌகீக*** காரியங்களை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் அதற்கான ஒத்தாசை பெற்றுக் கொள்ள ***மகா வல்லமையான*** தேவனைக் குறித்து அறிந்துக் கொள்ளக் கிடைத்தமையும், தேவனிடம் நீங்கள் உதவி பெற்றுக்கொள்ள முடிந்தமையும் எத்தகைய ***மாபெரும் வரப்பிரசாதம்*** என்று எண்ணிப் பார்க்கின்றீர்களா?

தேவ பிள்ளைகளே! ***விஷேசமாக*** தேவனாகிய கர்த்தர் இன்று உங்களுக்குக் கூறுவது, தேவன் எம்மை ***பெலப்படுத்தி*** இருக்கின்றார். என்பதேயாகும். ஏனென்றால் தேவனின் ஒரே மகனான இயேசுகிறிஸ்து ***பரி.லூக்கா 10:19***இல் கூறுகின்றதாவது, ***"இதோ சத்துருவினுடைய சகல வல்லமையையும், மேற் கொள்ளவும், உங்களுக்கு அதிகாரங் கொடுக்கின்றேன்."*** ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த முடியாது என்றாகும். ஆகையால் ***பயப்படாதிருங்கள்.*** யாருக்குமே உங்களுக்கு ஆபத்து விளைவிக்க முடியாது. கண்களுக்கு புலப்படாமல் மனிதர்களுக்கூடாகத் ***தீமைகளை விளைவிக்கும்,*** அசுத்த, அந்தகார வல்லமைகளுக்குப் ***பயப்படாதீர்கள்.*** நீங்கள் மிகவும் மெலிந்த பலவீனமானவர்களாகவிருக்கலாம். ஆனாலும் உங்கள் சரீரத்தைக் குறித்தல்ல உங்களுக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து நீங்கள் சிந்தியுங்கள். தேவன் மகா வல்லமையானவர்.

தேவ பிள்ளைகளே! உங்கள் தேவன் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதும், தேவனது ***பரிசுத்த ஆவியானவர்*** உங்களுக்குள் வாசம் பண்ணுகிறார். என்பதை எல்லா வேளையிலும் நினைவு கூர்ந்து. ***தியானம் பண்ணி*** வல்லமையின் ஆவியானவர் உங்களுக்குள் இருக்கின்றார். என்பதால் உங்களுக்குள் வல்லமை இருக்கின்றதென்று ***விசுவாசித்து நீங்கள் தைரியப்படுங்கள்.*** உங்கள் உள்ளத்திற்கு பயத்தை உருவாக்கி அதைரியப்படுத்த ***எதிராளிக்கு இடங் கொடுக்காதீர்கள்.*** சத்துருவின் அனைத்து கிரியைகளையும் மேற் கொள்ளுங்கள். சத்துருவானவனை மேற்கொள்ள உங்களிடம் இருக்கும் விசுவாசத்தை அதிகரித்துக் கொள்ள ***உபவாசத்துடனிருந்து ஜெபியுங்கள். மத்தேயு 17:21***இல் ***"ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும் அன்றி ஒரு சரீரத்திலிருக்கும் அசுத்த ஆவி புறப்பட்டுப் போகாது." இன்று வெற்றிகரமான நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! உங்களுடைய தேவ பரிசுத்த ஆவியானவர் உங்களை என்னிடம் அனுப்பி உங்கள் வல்லமையால் நிரப்புகின்றமையால் ஸ்தோத்திரம் இன்றும் சத்துருவானவனின் கிரியைகளை மேற் கொள்ள என்னை வல்லமைப்படுத்தியருளும். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (2 தீமோத்தேயு 1:7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஓகஸ்ட் 07
வியாழன்

# எமக்கு முன்னே பயணிக்கும் தேவனாகிய கர்த்தர் !

இன்றைய வேதவாசிப்பு
ஆமோஸ்
அதி: 06 – 07

**"நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்."** (ஏசாயா 45:2)

தேவனுக்குள் பிரியமான என் அருமை பிள்ளைகளே! **இன்றைய நாளிலும் ஈடு இணையற்ற தேவ அன்பினால் நிறைந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** தேவன் மிக நல்லவராகவும், நீதியின் தேவனாகவும் இருப்பதனால், எம்மேல் அளவற்ற அன்பு கொண்டிருப்பதனாலும், எப்பொழுதும் எமது வாழ்வில் நன்மையான, **சுபமான காரியங்களை பிறப்பித்து** அவற்றை நடைமுறைப்படுத்துவதிலேயே முனைந்திருக்கின்றார். **எரேமியா 29:11**இல் கூறுகின்றது, **"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்"** என்று கர்த்தர் சொல்லுகிறார். **அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே** என்றாகும்.

தேவ பிள்ளைகளே! தலைப்பில் கொடுக்கப்பட்ட வசனமானது, **தேவன் எமக்கு முன்னே செல்லுவார்** என்றாகும். எப்படியெனின் தேவன் உங்கள் வாழ்வின் பாதையில் காணப்படுகின்ற **தடைகளை நீக்கி உங்கள் வழிகளை சீர்ப்படுத்துகின்றார்.** ஆகையால் **கலங்காதிருங்கள்!** உங்களை ஜீவ பாதையில் அழைத்துக் கொண்ட தேவன் நிலையாக இருப்பதனால் **உங்கள் இருதயத்தில் தேவனை உறுதியாக விசுவாசியுங்கள்.** தேவன் உங்களுக்கு ஆயத்தப்படுத்திய வாழ்க்கைப் பாதையில் முடிவுபரியந்தம் உங்களை கொண்டு செல்ல தேவன் உங்களைக் கைவிடாத வண்ணம் முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றார் என்றால் மிகையாகாது **எனது 30 வருட ஊழியப் பயணத்திலும் என்னை வழுவாது காத்து இவ்வளவு தூரம் முன்னோக்கிக் கொண்டு வந்தது தேவனேயாகும்.** எவ்வளவாக தடைகள், உபத்திரவங்கள், துன்பங்கள் என்னை நெருக்கிய போதும் என்னை தோல்வியில் தளர்ந்து போகவிடாதபடி தேவனே அவை அனைத்தையும் நிர்மூலமாக்கி **எனக்கு வெற்றியைத் தந்தார்.**

தேவ பிள்ளைகளே! எனக்கு மாத்திரமல்ல, உங்களுக்கும் அப்படியே தேவன் கிரியை செய்வார் என்பதை **நீங்கள் விசுவாசியுங்கள்.** நீங்கள் எந்தவொரு மனிதனையும் பார்க்க வேண்டாம். மனிதன் உங்களுக்கு **பொருத்தனை பண்ணி உறுதிப்படுத்தியவைகளை** செய்யாமற் போகலாம். உங்களை **ஒரு பொருட்டாக எண்ணாதிருக்கலாம்.** ஆனாலும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் நன்மைகளை மாத்திரம் கருத்திற் கொள்கின்றபடியால் அவர் உங்களுக்குக் கொடுத்துள்ள பொருத்தனைகள் ஒரு நாளும் மாறாது. நீங்கள் எல்லா வேளையிலும் **தேவனின் முகத்தைத் தேடுங்கள். சதாகாலமும் தேவன் உங்களோடு இருப்பாராக!** அவர் சமூகம் உங்களுக்கு முன்பாக சென்று உங்கள் வழிகளை ஆயத்தப்படுத்துவதாக! **வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனக்கு நியமித்திருக்கும் வாழ்க்கைப் பாதைக்கு
முன்னால் நீங்கள் செல்கிறீர்கள் என்பதை இன்று நான்
அறிந்துக்கொண்டேன். உங்கள் அளவற்ற அன்புக்காக ஸ்தோத்திரம்
இன்றும் என் வழிகளை ஆயத்தப்படுத்துவீர்களாக
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தங்கள் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் தங்களோடே இருக்கிறதையும், இஸ்ரவேல் வம்சத்தாராகிய தாங்கள் என் ஜனமாயிருக்கிறதையும், அவர்கள் அறிந்துகொள்வார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." (எசேக்கியேல் 34:30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் 08 வெள்ளி

## நீங்கள் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாக இருக்கின்றீர்கள் !

இன்றைய வேதவாசிப்பு
ஆமோஸ் அதி: 08 – 09

**"ஆகிலும் மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனை அப்பொழுது துன்பப்படுத்தினதுபோல, இப்பொழுதும் நடந்துவருகிறது."**
(கலாத்தியர் 4:29)

அன்பார்ந்த தேவபிள்ளைகளே! **இன்றைய நாளில் ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன்.** வானத்து நட்சத்திரங்களைப் போல கர்த்தருடைய மகிமையான ஒளி உங்களிலே வீசும்படி அவர் உங்களைத் தெரிந்துக்கொண்டுள்ளமையால் நீங்கள் ***அதிரஷ்டசாலிகள். ஆபிரகாமின் சந்ததியாரையும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்*** என எழுதப்பட்டுள்ளது. ஆகையால் ஆபிரகாமின் மாம்சமாகிய இஸ்ரவேல் ஜனங்கள் பரலோக தேவ பிதாவின் ***சொந்தப் பிள்ளைகளாகியது*** போல நீங்களும் இயேசுகிறிஸ்துவிற்கூடாக தேவனின் ***சொந்தப் பிள்ளைகளாகி*** இருக்கின்றீர்கள்.

தேவ பிள்ளைகளே! ஆகையால் ***நீங்கள் கலங்காதீர்கள்!*** ஆனாலும் இன்றைய நாளில் ***கலாத்தியர் 4:29***இல் பிரதான தேவ வசனத்தில் கூறுவதாவது, ***"மாம்சத்தின் படி பிறந்தவர் ஆவியின்படி பிறந்தவனை அக்காலத்தில் துன்பப்படுத்தினது போல இப்பொழுதும் நடந்து வருகிறது"*** என்றாகும். நீங்கள் யோசிக்கலாம் நான் எப்பொழுது ஆவியில் பிறந்தேன் என்று வேதாகமத்தில் ***2 கொரிந்தியர் 5:17***இல் ***"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின"*** என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. அதன் கருத்தானது உங்கள் குணநலன்கள், ஒழுக்கம் செய்கைகள் அனைத்தும் வேறுபடுவதே ***புதிய சிருஷ்டியாகும்*** என்பதே. அவைகள் உங்களது வெளித்தோற்றத்தில் மாத்திரமல்லாது உங்கள் ***ஆத்மீக வாழ்விலும் உள்ளார்ந்த மாற்றம் ஏற்பட வேண்டும்.*** நீங்கள் இயேசுகிறிஸ்துவை உங்கள் வாழ்வில் ஏற்றுக் கொள்ளும் போது அதன்பின்பு தேவனின் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வந்து விடுவார். ***உங்கள் உள்ளத்தில் அவர் வாசம் பண்ணுவார்.***

தேவ பிள்ளைகளே! அப்பொழுது ஆத்துமீகத்தில் காணப்படும் சகல பலவீனங்களும் அகற்றப்பட்டு தேவன் உங்களை புது சிருஷ்டியாக்குவார். அப்பொழுது ***கலாத்தியர் 4:29***இல் குறிப்பிட்டுள்ளபடி நீங்கள் ***இயேசுகிறிஸ்துவின் பிள்ளையாக புதுசிருஷ்டியாக ஆவியில் பிறந்திருப்பதனால்*** உங்களுக்கு உங்கள் வீட்டில், உங்கள் அயல்வாசிகள், உறவினர்கள், நண்பர்கள் உங்கள் வேலைத்தளத்தில் கடமைபுரிபவர்கள் இவர்களுக்கூடாக ***உபத்திரவங்கள் வரமுடியும்.*** ஆனாலும் ***கவலைப் படாதீர்கள், பயப்படாதீர்கள்.*** இனி நாம் ஒரு போதும் இயேசுகிறிஸ்துவை மாம்சத்தின்படி அறியோம். உலகத்தை ஜெயித்த ***இயேசுகிறிஸ்து இன்று எம்மோடு ஜீவிக்கின்ற தெய்வமாக இருக்கின்றார்.*** உங்களுக்குள் ***விஷேசித்த விதமாக*** உங்களை ஆள்பவராக இருக்கின்றார். ***வெற்றிகரமான நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! உலகத்தில் எனக்கு உபத்திரவம் இருப்பதை நான் அறிவேன்.
ஆனாலும் உங்கள் ஆவியில் என்னை நிரப்பி பெலப்படுத்துங்கள்.
உபத்திரவங்களில் ஜெயம் பெற எனக்கு உதவி செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது." (பரி:மத்தேயு 5:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஓகஸ்ட் 09
சனி

# உங்கள் சரீரத்தைக் குறித்தும் வாழ்க்கையைக் குறித்தும் கவலைப்படாதீர்கள் !

இன்றைய வேதவாசிப்பு
ஒபதியா 01
யோனா 01

"தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது."
(ரோமர் 14:17)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளிலும் நன்மைகள் பல பெற்று மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** சர்வ உலகத்தினையும் படைத்து ஆளுகை செய்து நிருவாகம் செய்யும் இயற்கை நிகழ்வுகளை மாற்றி **அதி வல்லமையான காரியங்களைச்** செய்கின்ற ஜீவிக்கின்ற தேவனைக் குறித்து அறிந்துக்கொண்ட நீங்கள் மிகவும் **அதிஷ்டசாலிகள்.** ஆகையால் உங்கள் வாழ்க்கையில் பூமியின் காரியங்களைக் குறித்து ஒரு போதும் **கலங்காதிருங்கள்!** அவைகளை **எண்ணி, எண்ணி துக்கப்படாதிருங்கள்.**

தேவ பிள்ளைகளே! தேவனானவர் அனைத்து ஜாதிகளின் மத்தியில் அவரின் பிள்ளையாக உலகில் உங்களை வேறுபிரித்துக் கொண்டமை **பூமியின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படியாகவல்ல.** ஏனென்றால் உங்களுக்கு உணவு சரியான நேரத்திற்குக் கொடுத்து போசித்து, உடைகளை, மற்றும் அனைத்து தேவைகளையும் சந்தித்து **உங்களைத் திருப்திபடுத்தி சந்தோஷமாக வைப்பது மாத்திரம் தேவனின் குறிக்கோள் அல்ல.** ஆனாலும் பெரும்பாலோனோர் நினைக்கின்றார்கள் அவர்களது ஆத்மீக வாழ்க்கையானது எவ்விதமான பொருளாதாரத்தில் பற்றாக்குறைகளுமின்றி அவர்களது முக்கியமான தேவைகளும் **நிவர்த்தியாவதோடு உல்லாசமான வாழ்க்கை வாழலாம் என்றாகும்.** ஆகையால் அவர்களுக்கு மிகவும் சிறிய பொருளாதாரப் பிரச்சினை ஏற்படுமிடத்து இரட்சிக்கப்பட்ட வாழ்க்கையை விட்டு விலகி, தேவனுக்கு விரோதமாகத் தேவனைக் குற்றப்படுத்தும் வசனங்களைப் பேசி ஆவிக்குரிய வாழ்க்கைப் பாதையிலிருந்து விலகி விடுவார்கள். ஆனாலும் உங்கள் தேவன் உங்களது **சொந்த பிரச்சினைகளான உணவு, உடை, இருப்பிடங்களைக் குறித்து சிந்திக்காது,** அதை விட உங்கள் ஆத்துமாவைக் குறித்தும் உங்கள் வாழ்வினை எவ்வண்ணமாக முன்னோக்கிக் கொண்டு செல்வதென சிந்தித்து செயல் புரிகின்றார் என்பதையே மேலே தலைப்பில் காணப்படும் வேதாகம வசனத்தில் குறிப்பிடுகின்றார்.

தேவ பிள்ளைகளே! அப்படியாயின் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போம் என்று கூறி உங்கள் வாழ்க்கையைக் குறித்தாவது, சரீரத்தைக் குறித்தாவது **கவலைப்படாதீர்கள்.** இவை அனைத்தையும் **பரம பிதா பிழைப்பூட்டுகிறார்.** அவர்களைப் பார்க்கிலும் **நீங்கள் விஷேசித்தவர்களல்லவா?** எனவே **"கவலைப்படுகிறதனாலே உங்களில் எவன் தன் சரீரத்தின் ஒரு முழத்தைக் கூட்டுவான்"** என்றும் **"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்,"** அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என **மத்தேயு 6ம்** அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இவ் வசனங்களை தியானியுங்கள். இன்று முதல் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனது பரலோகத் தேவனாகையால் எனது சகல தேவைகளையும் நீங்கள் அறிந்தவராவிருக்கிறீர்கள். நான் இன்றையத்தினம் முதலாய் நான் எதனைக் குறித்தும் கவலைப்படமாட்டேன். எல்லா வழிகளிலும் என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்;..."
(பரி:மத்தேயு 6:26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஜீவ மன்னா<br>ஒகஸ்ட் **10**<br>ஞாயிறு | தேவ கிருபையைப் பெற்று மனந்திரும்பி பரிசுத்தமாக ஜீவியுங்கள் ! | இன்றைய வேதவாசிப்பு<br>யோனா<br>அதி: 02 – 03 |

**"மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும்,..."** (ஏசாயா 54:10)

பிரியமான தேவ பிள்ளைகளே! பரிசுத்தரும் வானங்களிலும், உயர்ந்தவருமான எம் சிருஷ்டிகரான **ஜீவிக்கின்ற தேவனின் முகத்தைத் தேடத் தந்திருக்கும் இக்காலைப் பொழுதிற்காக ஸ்தோத்தரித்து இன்றைய நாள் நலமிகு நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்களுக்கு ஒவ்வொரு நாளும் பலவிதமான பிரச்சினைகள், துன்பங்கள், வேதனைகள், ஆகியவற்றிற்கு முகங்கொடுக்க நேரிடுகிறது. ஆனால் இவைகள் அனைத்தும் சிறியவைகளே. **இன்று நாம் முகங்கொடுக்கும் பிரச்சினை, துன்பங்கள், சவால்கள்** இன்று இருக்கும் மனிதனல்ல, நாளை வேறு நபர்களை சந்திக்க நேரிடும். இல்லாவிடின் இன்று காணப்படுகின்ற மனிதனல்ல, நாளைய நாளில் அவனது **குண நலன்கள் சுபாவம் வித்தியாசப்பட முடியும்.**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் **உள்ளம் கலங்காதிருங்கள்!** உலகின் மனிதர்களின் உள்ளங்கள், குணநலன்கள், சூழ்நிலைகள் அனைத்தும் மாறுபடினும் நீங்கள் பயப்படாதீர்கள். ஏனென்றால் உங்கள் தேவன் ஒரு போதும் மாறாதவராயிருக்கிறார். **ஏசாயா 54:10**இல் தேவன் உங்களுக்குக் கூறுவதாவது **"மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும் என் கிருபை உன்னை விட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும்"** என்று உன்மேல் மனதுருகிற கர்த்தர் சொல்லுகிறார். தேவனின் மிக **உன்னதமான காருண்யத்தினால் என்னுடைய 30 வருட ஆத்மீக வாழ்வில் நான் நல்ல அனுபவங்களைப் பெற்றுள்ளேன். அப்படியே 13 வருடம் சுதந்திரமான தனி ஊழியத்திலும் நான் தேவனது என்றும் மாறாத கிருபையை தினந்தோறும் முடிவில்லாமல் பெற்றுக் கொண்டேன்.** நீங்களும் வாழ்க்கைப் பாதையில் முன் செல்ல தேவ இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தேவ பிள்ளைகளே! உலக மனிதர்கள் தேவனை அறிகின்ற அறிவில்லாதபடியால் **பல பிழைகள், அக்கிரமங்கள், அநீதியான காரியங்களைச் செய்தார்கள்.** உலகத்தில் வேறுபிரிக்கப்பட்டுள்ள நாமும் பாவங்களைச் செய்கின்ற போது நாங்கள் அழிந்து போகாதபடி அவரது **முடிவில்லாத இரக்கத்தினால் எம்மை வழுவாது பாதுகாக்கின்றார்.** தேவனின் முடிவில்லாத இரக்கம் கிடைக்கிறது. என எண்ணி **பாவங்கள் செய்யாதீர்கள்.** பாவ வாழ்வினின்று விலகி பரிசுத்தமாக வாழ முற்படுங்கள். அவரது **இரக்கத்தை துச்சமாக கருதி விடாதீர்கள்.** மனந்திரும்புங்கள். **இன்று வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

தேவனே! உங்கள் கருணையானது ஒரு போதும் என்னை விட்டு விலகாதபடியால் ஸ்தோத்திரம் ஆனாலும் உங்கள் கருணையைக் குறித்துச் சொல்லி உங்களுக்கு விரோதமாக பாவம் செய்வதற்கு என்னை ஊக்குவிக்கும் சாத்தானிடமிருந்து என்னை மீட்டுக் கொள்ளுங்கள்.

இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்." (ஏசாயா 54:8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் திங்கள் **11**

# உங்கள் முழு உள்ளத்தோடு தேவனைத் தேடுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

யோனா 04
மீகா 01

**"...நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்."** (2 நாளாகமம் 15:2)

அன்பார்ந்தவர்களே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் காலை தோறும் மலரும் புதிதான கிருபையிலே நிரப்புகின்ற இன்றைய நாளின் காலைப் பொழுதினிலே தேவனின் நன்மையான ஈவுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என வாழ்த்துகின்றேன்.** ஒவ்வொரு நாளும் நீங்கள் இந்த **ஜீவ மன்னா தினதியானங்களை** மிகவும் அன்போடு உங்கள் கரங்களில் வைத்து வாசித்துக் கொணடிருப்பது இதில் எழுதியுள்ள அனைத்து தேவ செய்திகளுக்கூடாக சிருஷ்டிப்பின் தேவன் **உங்கள் ஆத்துமாவிற்கு புத்துணர்ச்சியைக்** கொடுக்கின்றபடியாலும் உங்கள் உள்ளத்தை தொடுவதாலும் தேவன் தனது வசனங்களால் தேவனது **அன்பின் ருசியையும், இனிமையையும், நீங்கள் பெற்றுக் கொள்வதாலும் அல்லவா?**

தேவ பிள்ளைகளே! **ஜீவ மன்னா தினத்தியானங்களைப்** பெற்றுக் கொள்ளும் நீங்கள் **மிகவும் அதிரஷ்டக்காரர்கள்** என எனக்குத் தோன்றுகிறது. உங்களுக்கும் அப்படித் தெரிகின்றதா? அதனிலும் பார்க்க **பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற சிருஷ்டிப்பின்** தேவ பிதாவைக் குறித்து அறிந்துக் கொண்டு அவரது **சொந்தப் பிள்ளைகளாகி** நித்திய ஜீவனுக்கு உரிமை பெற்றுள்ள நீங்கள் உலகிலேயே மற்ற அனைத்து மனிதர்களைப் பார்க்கிலும் **மிகவும் விஷேசித்தவர்கள்** ஆனாலும் உலக மாந்தரைப் பார்க்கிலும் **விஷேசித்தவராகுவது** எப்படி என நீங்கள் **நினைக்கின்றீகளா?** ஏனென்றால் உங்களிலும் பார்க்க பணக்காரர்களாக, நன்றாகப்படித்த, திறமைமிக்க, அறிவாளிகள், பெலன் வாய்ந்த மனிதர்கள் உலகெங்கும் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனாலும் **மனிதனைப் படைத்த தேவன் யார்?** என தெரிந்துக் கொண்டு தேவனோடு வாழ்பவர்களுக்கு பரலோகத்திலும், இப்பூவுலகிலும் கிருபை கிடைக்கின்றபடியால் **நீங்கள் விஷேசித்தவர்கள்,** அதுமாத்திரமல்லாது நீங்கள் அறிவிலும், ஞானத்திலும் உங்கள் தேவனை அறிந்துக் கொள்ளவில்லை தேவன் தாமே அனைத்து மனிதர்களின் மத்தியிலும் **உங்களை தெரிந்துக் கொண்ட தேவன் உங்கள் சிருஷ்டிப்பின் தேவன்** என்பதையும், தேவனே! உங்கள் இரட்சகர் என்பதையும் தெரிந்துக் கொள்ளச் செய்துள்ளார்.

தேவ பிள்ளைகளே! மேலே குறிப்பிட்ட பிரதான வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி **தேவனை எப்போதும் தேடுங்கள்.** அப்பொழுது தேவன் உங்களுக்கு வெளிப்படுவார். நீங்கள் தேவனுக்குத் தூரமாக இருக்க முயற்சி செய்யாதீர்கள். ஏனென்றால் "**நீங்கள் தேவனைக் கை விட்டீர்களாயின் தேவன் உங்களைக் கைவிட்டு விடுவார் என தேவ வசனம்**" கூறுகின்றது. ஆகையால் தேவனின் அன்பை எப்போதும் நினைவிற் கொண்டு **நித்திய அன்பினால் உங்கள் உள்ளத்தோடு தேவனைத் தேடுவீர்களானால் தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியும்.** இன்றைய நாளிலும் தேவன் உங்களை **ஆசீர்வதிப்பாராக! இன்று ஆசீர்வாதமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நான் உங்களைத் தேடும் போது தான் நீங்கள் எனக்கு வெளிப்படுவீர்களென நான் அறிந்துக் கொண்டேன். என்னுடைய வாழ்வில் ஒவ்வொரு நாளும் உங்களைத் தேட எனக்கு கிருபை செய்யுங்கள் உங்கள் நித்திய அன்பினால் என்னை நிரப்புங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்." (எரேமியா 29:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் 12

செவ்வாய்

## உற்சாகமாய் கொடுங்கள் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

மீகா

அதி: 02 – 03

**"...உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்."**
(2 கொரிந்தியர் 9:7)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்குள் தேவ சமாதானம், அன்பு பரிசுத்தம் என்பனவைகள் ஆளுகை செய்யும்படியாக வாழ்த்துகின்றேன். இன்றும் ஜீவ மன்னா தினதியானங்களுக்கூடாக** உங்களை அழைப்பது பரலோகத்தில் வாசம் பண்ணும் எங்கள் சிருஷ்டிப்பின் தேவனேயாவார். ஏனென்றால் தேவனின் அன்பைக் குறித்து தேவ வசனங்கள் எழுதப்பட்டுள்ளமையால் **இன்றும் உங்களை நித்திய அன்பிலே நெருங்கி சேர்த்துக் கொள்கிறார்.**

தேவ பிள்ளைகளே! சர்வ வல்லமையுள்ள தேவன் உங்களை அளவு கடந்த, **சடு இணையற்ற விதமாக அன்பு செய்கிறார்.** நீங்களும் அவரை அதற்கு **பதிலீடாக** அன்பு செய்து அவருக்குப் பிரியமான முறையில் ஜீவிப்பது **அவரது விருப்பமாகவிருக்கிறது.** மேலே கூறப்பட்டுள்ள பிரதான வேத வசனத்தில் எழுதப்பட்டிருப்பது உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். என்றாகும். ஆகையால் தேவ இராஜ்ஜியத்திற்கென நீங்கள் ஏதாவதொன்றை கொடுக்கும் போது **முழு இருதயத்தோடு கொடுங்கள்.** தேவனின் கட்டளை என்பதனால் நான் அதைச் செய்யவே வேண்டுமென்ற எண்ணத்தை **உங்கள் உள்ளத்தில் அகற்றி விடுங்கள். உங்கள் ஜெப நேரத்தை, உங்கள் தசமபாகம், மற்றும் காணிக்கைகள், தேவ ஊழியங்கள்** சம்பந்தமான காரியங்களில் உதவி செய்தல், ஆதரவற்றவர்களுக்கு ஒத்தாசை புரிதல் ஆகிய அனைத்து காரியங்களையும் நீங்கள் **மன சந்தோஷத்துடன் நிறைவேற்றுங்கள்.** அப்படியாக நீங்கள் மனமகிழ்ச்சியுடன் அவைகளைச் செய்யும் போது இன்னும் அதிகமாக உங்களை அனைத்திலும் பூரணமாகும்படி தேவனின் அநுக்கிரகம் உங்களில் பெருகிக் கொண்டேயிருக்கும்.

தேவ பிள்ளைகளே! சமாரி தேசத்தில் கொடிய பஞ்சம் உருவாகிய காலத்தில் எலியா எனும் தேவ மனிதருக்கு **சாறிபாத் ஊரிலுள்ள விதவைக்கு ஆகாரங் கொடுத்து பராமரிக்கும்படியாக கர்த்தர் கட்டளை பிறப்பித்தார்.** அதற்கு அவள் பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல் என்னிடத்தில் இல்லை எனக் கூறினாள். பின்பு **எலியாவின் சொற்படி செய்தாள்.** விதவையும் மகனும் அநேக நாள் சாப்பிட கர்த்தர் ஆசீர்வதித்தார். மன சந்தோஷத்துடன் அவள் செய்த காரியத்தினால் **பானையில் மா செலவழிந்து** போகவும் இல்லை. கலசத்தின் எணணெய் குறைந்து போகவும் இல்லை என வசனங்கூறுகிறது. நீங்களும் சந்தோஷ மனதோடு தேவ இராஜ்ஜியத்திற்காக விதையுங்கள். **தேவனின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து அதிகமதிகமாகக் கொடுங்கள்.** அப்பொழுது உங்கள் வறுமை, இல்லாமை அகன்று சந்தோஷத்துடன் வாழக் கர்த்தர் **ஆசீர்வதிப்பார். இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உற்சாகமாக, சந்தோஷத்துடன் கொடுப்பவர் பேரில் நீங்கள் பிரியமாயிருப்பதை அறிந்துக் கொண்டேன். சந்தோஷத்துடன் தேவ இராஜ்ஜியத்திற்கு ஏதாவதொன்றைச் செய்ய எனக்கு கிருபை செய்யுங்கள். இயேசுவின் கிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார்." (2 கொரிந்தியர் 9:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஓகஸ்ட் 13 புதன்

# நெருக்கத்தின் போது உங்களோடிருக்கும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

மீகா அதி: 04 – 05

"நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார்." (சங்கீதம் 118:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இது கர்த்தர் உண்டு பண்ணின நாள் இதுவே களிகூர்ந்து மகிழக்கடவோம் என **சங்கீதம் 118:24**இல் **காணப்படுவதைப் போல் இந்நாளில் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்று மகிழ்ந்திருங்கள் என வாழ்த்துகின்றேன்.** மனிதர்களாக இவ்வுலகில் பிறந்த நாமனைவரும் ***மிக அதிர்ஷ்டசாலிகள்*** ஆவோம். மனிதனாக பிறப்பதற்கு அப்படியான ***உன்னத வரப்பிரசாதம்*** பெற்றுக் கொண்ட நாங்கள் ஜீவிக்கின்ற ஜீவிய காலம் முழுவதும் படுகின்ற பல ***வேதனைகள் துன்பங்கள், முகங்*** கொடுக்க வேண்டிய பல பிரச்சினைகள், தடைகள் இவைகளின் நிமித்தமாக ஆதரவற்றவர்களாக ***துன்புறும் சந்தர்ப்பங்கள் அநேகமாயிருக்கின்றன.*** அவைகளின் மத்தியில் எங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி நிகழ்வது ஆபத்துக்களும் வேதனைகளுமே.

தேவ பிள்ளைகளே! ***உள்ளம் கலங்காதிருங்கள்!*** உலக மனிதர்களைப் போல அல்லாது ***உங்களுக்கு திடீர் ஆபத்துக்களும், பிரச்சினைகளும்*** ஏற்படும் போது உங்களை மீட்டுக்கொள்ள தேவனானவர் ***உங்களோடிருக்கின்றார்.*** ஏனென்றால் இன்றைய நாளில் **சங்கீதம் 118:5**இல் சங்கீதக்காரர் உங்களுக்குக் கூறுவது **நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்.** கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார் என்றாகும். அவரது தேவன் இன்றும் அவ்வண்ணமாகவே எவ்வித மாற்றமுமின்றி **உங்களோடிருக்கின்றார்.** ஆகையால் நீங்கள் தேவன் பேரில் விசுவாசங் கொண்டவர்களாயிருங்கள். ஆனாலும் உங்கள் **ஆபத்து நாட்களிலும், துன்ப நாட்களிலும்** மாத்திரமே தேவனை நோக்கி கூப்பிடும் பழக்கத்தைத் தவிர்த்து விடுங்கள். உங்கள் வாழ்வில் உங்கள் **சந்தோஷத்தில், துக்கத்தில்,** இருக்கும் எல்லா வேளையிலும் நீங்கள் தேவனோடு மிகவும் நெருங்கிய சம்பந்தத்தை வைத்துக் கொள்ளுங்கள். ஆனாலும் அநேக தேவ பிள்ளைகள் செய்கின்றதைப் போல பிரச்சினையின் போது, வருத்தத்தின் போது, **ஆபத்துக்களின் போது** மாத்திரம் தேவனைத் தேடுவதில் முயற்சி செய்யாதிருங்கள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் தேவனானவர் உங்களோடு நிகரில்லா **அன்புடன் இணைந்திருப்பதனால்** நீங்களும் தேவனுக்கு அன்பு செய்து தேவனின் முகத்தைத் தேடி தேவனுக்குள் நெருங்கி ஜீவியுங்கள். அப்படியாக நீங்கள் தேவனுடைய ***அன்பான பிள்ளையாகுவீர்களெனின்*** உங்கள் திடீர் விபத்துகளின் போதும், நெருக்கத்தின் போது **ஜெபம்** செய்யுமிடத்து **தேவன் உங்களுக்கு பதில் கொடுத்து** அதிலிருந்து உங்களை விடுவிப்பார். ஏனென்றால் உங்கள் **ஆபத்தில்** உங்கள் அருகிலிருந்து உங்களுக்கு ***உதவி செய்வார்.*** ***இன்று வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! எனது ஆபத்து நேரத்தின் போது எனது நெருக்கத்தின் போது என்னோடு கூட இருப்பதனால் உங்களுக்கு ஸ்தோத்திரம். ஆபத்திலே மாத்திரமின்றி எல்லா வேளையிலும் எனக்கு உங்கள் முகத்தைத் தேடி உங்களோடு கிட்டிச் சேர்ந்திருக்க எனக்கு உபகாரஞ் செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்." (சங்கீதம் 91:5,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் **14**
வியாழன்

## உங்கள் கைக்கிரியைகளை ஆசீர்வதிக்கும் இஸ்ரவேலின் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

மீகா
அதி: 06 – 07

**"உன் தேவனாகிய கர்த்தர் உன் கைக்கிரியைகளிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார்;..."** (உபாகமம் 2:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில் *மட்டற்ற மகிழ்ச்சியில் நிறைந்திருக்கும் நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.*** உங்கள் கைக்கிரியைகள் ஆசீர்வாதம் பெறுவதாக என பிரார்த்திக்கின்றேன். மனிதனை ஆசீர்வதிக்க மிகவும் பிரியப்படுகின்றவர் இஸ்ரவேல் தேவனே! என கூறுகின்றேன். ஏனென்றால் நீ உன் தேவனாகிய ***கர்த்தரின் சத்தத்துக்குச் செவி கொடுக்கும் போது*** இப்பொழுது சொல்லப்படும் ***ஆசீர்வாதங்களெல்லாம்*** உன் மேல் வந்து உனக்குப் பலிக்கும். என்று ***உபாகமம் 28:2***இல் கூறியிருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! தேவன் இஸ்ரவேலின் தேவன் என்பதும் அவரே இஸ்ரவேல் ***ஜனங்களை ஆசீர்வதிக்கின்றவர்*** என்பதை அறிவேன். ஆனாலும் இன்று என்னை ஆசீர்வதிப்பது யார்? என நீங்கள் நினைக்கின்றீர்களா? ***உங்கள் உள்ளம் கலங்காதிருகட்டும்!*** எங்கள் தேவனுடைய நாமம் சேனைகளின் கர்த்தர். உங்கள் மீட்பராகிய கர்த்தர், இஸ்ரவேலின் பரிசுத்தர் முழு உலகத்திற்கும் தேவனாக இருக்கின்றார். என்று பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் ***இரட்சகர் இயேசுகிறிஸ்துவின்*** பிள்ளையாக நீங்கள் இருக்கின்றீர்கள். ***நீங்கள் நமஸ்கரிக்கும்,*** நீங்கள் ***சேவிக்கும் பரலோகத்தில் வாசம் பண்ணும் சிருஷ்டிப்பின்*** தேவன் உங்களை தேவனது பரிசுத்த பிள்ளையாக்கிக் கொண்டமை உங்களையும் இஸ்ரவேலைப் போல ஆசீர்வதிக்கவேயாகும். மேலே பிரதானமாக கூறுவது ஏனென்றால் உன் தேவனாகிய கர்த்தர் உன் ***கைக்கிரியைகளிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார்.***

தேவ பிள்ளைகளே! உங்கள் கரங்களின் வேலைப்பாடுகள் எவைகளாக இருந்தாலும் அவைகளை ஆசீர்வதிக்க தேவன் கிரியை செய்வார். ***உங்கள் கைக்கிரியைகள், வேலைப்பாடுகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதற்காக தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பதாக தேவன் பொருத்தனை பண்ணியுள்ளார்.*** ஆகையால் கைக்கிரியைகள் உண்மையாகவும் பரிசுத்தமாகவும் செய்யுங்கள். உங்கள் கரங்களை பரிசுத்தமாக வைத்துக் கொள்ள முற்படுங்கள். கர்த்தர் ***உங்கள் களஞ்சியங்களிலும்*** நீங்கள் கையிடும் எல்லா வேலையிலும் ***உங்களுக்கு ஆசீர்வாதங்களைக் கட்டளையிடுவார்.*** நீங்கள் ஜாதிகளின் மத்தியில் உயர்ந்திட கர்த்தர் செயற்படுவார். உங்களை வாலாக்காமல் தலையாக்கி வைத்திடுவார். எளிய சகோதரர்களுக்கு அவசரத்தினிமித்தம் கடன் கொடுக்கவும், அநேகருக்கு கொடுக்கும்படியாக உங்களை ஆசீர்வதிப்பார் **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் இஸ்ரவேலின் தேவனைப் போன்று என்னுடைய தேவனுமாவீர்கள். உங்களுக்குக் கீழ்படிந்து ஜீவித்து எனது கைகளின் அனைத்து வேலைகளையும் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள எனக்கு உபகாரம் செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை; நீ அநேகம் ஜாதிகளை ஆளுவாய், உன்னையோ அவர்கள் ஆளுவதில்லை." (உபாகமம் 15:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் 15

வெள்ளி

# இன்றும் உங்களைக் குறித்து சிந்திக்கும் இயேசுகிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு

நாகூம் அதி: 01 – 02

**"...நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்."** (பரி.யோவான் 17:24)

அன்பான தேவ பிள்ளைகளே! அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும் என்று வேதாகமம் உரைக்கும் ஜீவிக்கின்ற **இயேசுவின் வல்லமையான நாமத்தினால் புதிய கிருபை, புதிய பெலன் பெற்று இன்றைய நாளை ஆரம்பிக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** மனிதர்களை அவர்களது பாவத்திலும், அவர்களது பரம்பரை சாபத்திலும் மீட்டுக்கொள்ள **மனுவுருவெடுத்து** உலகிற்கு வநத சர்வ வல்லமையுள்ள தேவ பிதாவின் ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிந்து அவரை முழு உள்ளத்தோடு விசுவாசித்துக் கொண்டிருக்கும் **நீங்கள் பாக்கியவான்கள்.**

தேவ பிள்ளைகளே! பரலோகப் பிதாவின் மேன்மையான பிரியத்தைப் போன்று தேவனின் ஒரே பேறான குமாரானாக உலகில் அவதரித்த **இயேசுகிறிஸ்து எமக்காக கசையடிகளால் வேதனைப்பட்டு, சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டு மிகக் கொடூரமான, வேதனையான** மரணத்தைத் தழுவினார். என்பதை நாம் அனைவரும் அறிவோம். அத்தோடு நின்று விடாமல் தேவன் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து இப்பூமியில் ஜீவிக்கின்றவராக வெளிப்பட்டு **உயிர்த்தெழுந்ததைக்** குறித்து சான்றுபகின்று **40 நாட்களின்** பின்னர் பரலோகத்திற்கு எழுந்தருளினார். பரிசுத்த வேதாகமத்தில் **எபிரேயர் 1:3**இல் இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய நன்மையின் சொரூபமாயிருந்து சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்திலே தாங்குகிறவராய் தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி **உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய** வலது பாரிசத்திலே உட்கார்ந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள **யோவான் 7:24**இல் தேவனுடைய வெளிப்பாட்டின் பிரகாரம் அது எங்களுக்கு உறுதிப்படுத்துகிறது. அங்கே தேவனிடம் இயேசுகிறிஸ்து கேட்பது எங்களையும் அவர் இருக்கும் இடத்திற்கு கூட்டிச்செல்லும்படியாக அல்லவா?

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** இரட்சகர் இயேசுகிறிஸ்து எங்களை அதிகமாக நேசிக்கின்றமையால் இன்றும் எங்களுக்காக **மத்தியஸ்தம் பண்ணுபவராகவிருக்கிறார்.** பரலோகத்தில் தேவன் இருக்கின்ற இடத்தில் அவரோடு கூட இருப்பதற்கு உங்களுக்கும் ஒரு இடம் **ஆயத்தப்படுத்தியுள்ளபடியால்** உங்களை அந்த இடத்திற்கு கொண்டு செல்ல **துணையாயிருந்து, உதவி செய்ய செயற்படுகின்றார்.** தேவன் பரலோகத்தில் **வாசம் பண்ணுகின்றாரா?** இயேசு என்று அழைக்கும் ஒரு நொடியில் தேவன் உங்கள் அருகிலிருக்கின்றார். ஆகையால் என்றும் இயேசு உங்களோடு கூடவே இருக்கின்றார். நீங்கள் தனியாக அல்ல இயேசு உங்களோடு இருக்கின்றார். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் குமாரனுக்காக ஸ்தோத்திரம் தேவன் இன்றும் என்னைக் குறித்து சிந்திப்பதனால் எனக்காக மத்தியஸ்தம் பண்ணுகின்றார். நீங்கள் தேவனின் குரல் கேட்டு என்னை ஆசீர்வதியுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்."
(பரி:யோவான் 14:3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒகஸ்ட் 16
சனி

## உங்களுடைய ஆத்துமா தேவனுடைய கரத்தில் இருக்கிறது !

இன்றைய வேதவாசிப்பு
நாகூம் 03
ஆபகூக் 01

**"சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது."** (யோபு 12:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! மேலே வானத்திலும் கீழே பூமியிலும் சகலவற்றையும் உருவாக்கின சர்வ வல்லமை பொருந்திய ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் தேவனுடையவர்களாகிய உங்களனைவரையும் இன்றைய தினத்தில் தேவ கிருபை பெற்று வாழ வாழ்த்துகிறேன்.** இப்பூமியில் வசிக்கும் **ஏழுநூறு கோடிக்கு** (700) மேற்பட்ட சகல ஜனங்களும் ஜீவனுள்ள தேவனால் உருவாக்கப்பட்ட தேவ பிள்ளைகளே! நாம் யாவரும் **தேவனுக்கு சொந்தமானவர்கள்.** ஆயினும் எப்படிப் படைக்கப்பட்டோம், எவரால் படைக்கப்பட்டோம், எதற்காய் படைக்கப்பட்டோம் என்பதை அறிந்தவர்கள் மிகச் சிலரே. இந்த மிகச் சிறிய கூட்டத்தில் நானும், நீங்களும் தேவனை அறிந்து கொண்டு தேவனின் பிள்ளையாக இருப்பது எவ்வளவு **பெருமதியானது.** ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

அன்பார்ந்தவர்களே! மனிதர்களுடைய வாழ்வில் **அநேக துன்பங்களும், பலவிதமான பிரச்சினைகளும, கஷ்டங்களும், போராட்டங்களும்,** ஏற்படுவதை நாம் அறிவோம். ஏனெனில் தேவ பிள்ளைகளாகிய எமக்கே **உலகத்தில் உபத்திரவங்கள்** உண்டென்று எம் இரட்சகர் சொல்லியிருக்கிறார். தேவனுடைய அன்புப் பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவருக்கும் உலகின் அந்தகாரத்திற்கு அதிபதியாகிய சாத்தானின் சோதனைகளை, போராட்டங்களை உண்டு பண்ணி **துன்பங்கள், வேதனைகள், பிரச்சினைகளை தருகிறான்** என்றால், தேவனை அறியாத, அவரை ஏற்றுக்கொள்ளாத உலகத்தின் பிள்ளைகளுக்கு எவ்வளவு உபத்திரவத்தின் வாதைகளை ஏற்படுத்துவான். எத்தகைய பிரச்சினைகளை கொண்டு வந்து எம்மை **சோதனைக்குட்படுத்துவான்** என்பதை எம்மால் சிந்திக்க முடியுமல்லவா? ஆயினும் படைத்த தேவனை அறிந்துக் கொண்ட நாங்களனைவரும் உபத்திரவங்கள், போராட்டங்கள், ஏற்படும் வேளையில் நாம் அவ்ரை நோக்கி அழைத்து முறையிடும் போது அவர் எமக்கு சமீபமாக இறங்கி வந்து ஜெபத்தை கேட்டு அருள் செய்து உதவி செய்கிறவராய் இருக்கிறார். இன்றைய தின பிரதான வசனமாகிய **யோபு 12:10**இல் ***"சகல பிராணிகளின் ஜீவனும் மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது"*** என்பதாக கூறப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! மனிதர்களாகிய நாங்கள் எவ்வளவு பாக்கியவான்கள். ஏனெனில் உலகத்தையும் உலகில் காணும் **சகலவற்றையும் படைத்து,** காத்து வரும் **சர்வ வல்லமையுள்ள மகத்துவத்தின்** தேவனானவர் எங்கள் ஆத்துமாவை குறித்து மிகச் கரிசனையுடையவராய் இருக்கிறார். இது இப்படியாயின் எம் வாழ்வைக் குறித்ததான காரியங்களில் **மிக அக்கறை செலுத்தி செயலாற்றுகிறவராய்** இருக்கிறார் என்பதை **சிந்தியுங்கள்.** ஆகையால் தேவனை அறிந்த ஏற்றுக் கொண்ட அன்பு தேவ பிள்ளைகளே! உங்கள் எதிர்கால மனக்கோட்டைகள் யாவும் வீண் கவலைகள் யாவும், தேவையற்ற வீணான காரியமாகும். ஆகவே உங்கள் வாழ்க்கையை **தேவ கரத்தில் ஒப்படைத்து விட்டு ஆத்துமீக ஜீவியத்தை விசுவாசத்தோடும், உறுதியோடும் பற்றிப் பிடித்துக் கொண்டு செல்லுங்கள்.** உங்கள் கால்கள் தள்ளாதபடி, இடறிவிழாதபடி, தேவன் உங்களை கரம் பிடித்து காத்து ஆசீர்வதித்து வழி நடத்துவார். **இன்று ஆசீர்வாதமான வெற்றியின் நாள்!**

ஜெபம்

அன்பின் இயேசுவே! என் ஆத்தும நேசரே என் ஆத்துமாவை குறித்து மிக அக்கறையுள்ளவரே! என் வாழ்வின் சகல காரியங்களையும் உங்கள் வசம் அர்ப்பணிக்கிறேன். உங்கள் விருப்பம் போல் ஆசீர்வதியுங்கள்.

இயேசுவின் நாமத்தினால். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்." (1 பேதுரு 2:25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் 17

ஞாயிறு

## உங்களுக்கு எதிராக தேவக் கட்டளை வெளிப்படுவது ஏன்?

இன்றைய வேதவாசிப்பு

ஆபகூக் அதி: 02 – 03

**"மனாசே தன் எல்லாச் செய்கைகளினாலும் செய்த பாவங்களினிமித்தம் யூதாவைத் தமது சமுகத்தை விட்டு அகற்றும்படி கர்த்தருடைய கட்டளையினால் அப்படி நடந்தது."** (2 இராஜாக்கள் 24:3)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! எமது அருமை இரட்சகர் ***இயேசுகிறிஸ்துவின் ஜீவனுள்ள நாமத்தினால் இன்றைய தினம் உங்கள் வாழ்விலே புதிய ஆசீர்வாதங்களை கொண்டு வரும்படியாக ஜெபிக்கிறேன்.*** இஸ்ரவேலின் தேவனானவர் இன்றும் ஜீவனுள்ளவராயிருக்கிறபடியால் அவருடைய பிள்ளைகளாகும்படி அதாவது ***ஆத்மீக இஸ்ரவேலராய்*** காணப்படும்படியாய் உலகிலிருந்து எம்மை வேறு பிரித்துக் கொண்டார். இதினால் நாம் ***விஷேசித்தவர்களாய்*** விளங்குகிறோம். ஆகையால் ***நீங்கள் கலங்காதிருங்கள்!***

தேவ பிள்ளைகளே! பெற்றோர் தமது பிள்ளைகள் பராமரிப்பதைவிட மேலாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ***எம்மை பராமரிக்கிறார்.*** பெற்றோர் தம் பிள்ளைகள் இச்சமுகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்திலே நல்ல நிலைமையிலே ***கௌரவத்துடன்*** வாழ்வதைக் காண மிக ***ஆவலுள்ளவர்களாய்*** இருப்பார்கள். அதேபோல் எம்மை உண்டாக்கின எமது பரம பிதாவாகிய இயேசுகிறிஸ்து தாயைப் போல, தந்தையைப் போல எமது ***வளமான வாழ்வையே எதிர்பார்க்கிறார்.*** ஆகையால் நாங்கள் எப்போதும் அவருக்கு ***கீழ்படிந்து*** அவரது ***கட்டளைகளை கைக்கொள்ள வேண்டும்.*** அவரது வார்த்தைகளுக்கு ***செவிமடுக்க வேண்டும்.*** ஆனால் நாம் ***கீழ்படியாதபடி*** அவரது வார்த்தைகளை கேளாது, கற்பனைகளுக்கு கீழ்படியாது, அவரை விட்டு விலகி போகும் போது அவர் எம்மை தண்டிக்கிறார். இத்தண்டனை பெற்றோர் பிள்ளைகள் மீது கோபம் கொண்டு கொடுக்கும் தண்டனையைப் போலிருக்கும். இதையே இன்றைய தினச்செய்தியின் பிரதான தேவ செய்தியாக குறிப்பிடுகின்றது. ***2 இராஜாக்கள் 24:3***இல் மனாசே என்னும் ராஜா கர்த்தருடைய ***பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்.*** அவர் சிந்தின குற்றமற்ற இரத்தத்திற்காகவும், கீழ்படியாமையினால் ***பாவங்களின் நிமித்தமாக*** யூதாவைத் தமது சமுகத்தை விட்டு அகற்றும்படியாக அநேக தேசங்களின் விரோதத்தை ஏற்படுத்தினார். அநேகர் அவனுக்கு ***விரோதமாக*** எழும்பினார்கள்.

தேவ பிள்ளைகளே! நீங்களும் ***மிக ஜாக்கிரதையுடன்*** இருங்கள். அவர் மிகவும் கிருபையுள்ளவர் தான்,பாவங்களை மன்னிக்கிறவர், மனஸ்தாபப்படுபவனுக்கு ***மனமிரங்குகிறவர்.*** ஆனால் ஒரு போதும் பாவக்காரியங்களுக்கு துணை செய்ய மாட்டார். ***குற்றவாளியை ஒரு போதும் சுத்தவாளி என்றுரைக்க மாட்டார்.*** இன்று அவருக்கு செவி கொடுத்து உங்கள் இருதயத்தை அவர் பக்கமாய் திருப்புங்கள் உங்களை பாவத்திற்கு இழுத்துச்செல்லும் சாத்தானுக்கு எதிர்த்து நில்லுங்கள். கர்த்தர் உங்கள் அருகில் உங்களுக்குள் இருக்கிறார். தேவன் ***உங்களை ஆசீர்வதிப்பார். இன்று ஜெயம் தரும் நாள்!***

**ஜெபம்**

என் அன்பின் தேவனே! பாவத்திற்கு துணை செய்யாது பாவத்தை வெறுப்பவரே! என்னை தண்டிக்காதபடி என்னை மன்னித்து உங்கள் கட்டளைகளை கைக்கொண்டு உங்களுக்கு உகந்தபடி கீழ்படிந்து ஜீவிக்க கிருபை செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"என் கண்கள் அவர்களுடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கிறது; அவைகள் என் முகத்துக்கு முன்பாக மறைந்திருக்கிறதில்லை; அவர்களுடைய அக்கிரமம் என் கண்களுக்கு முன்பாக மறைவாயிருக்கிறதுமில்லை." (எரேமியா 16:17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஜீவ மன்னா | தேவனைத் தேடுங்கள் அவர் உங்கள் காரியங்களை வாய்க்கச் செய்வார் ! | இன்றைய வேதவாசிப்பு |
|---|---|---|
| ஓகஸ்ட் 18 திங்கள் | | செப்பனியா அதி: 01 – 02 |

**"...அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச்செய்தார்."** (2 நாளாகமம் 26:5)

என் அன்புக்குரிய தேவ ஜனங்களே! **மகிமைக்கு பாத்திரரான ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இந்த நாள் சகல வெற்றிகளுடன் கூடிய நந்நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** கடல் சூழ்ந்த இந்த இலங்கைத் தீவிலே வாழும் பெரும்பாலான ஜனங்கள் நமக்கு **அருள் புரிந்து ஒத்தாசை** செய்ய அநேக தெய்வங்கள் இருப்பதாக விசுவாசிக்கிறார்கள். சகல தெய்வங்களுக்கும் மேலான தெய்வம் ஜீவனுள்ள ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை அறிந்த நீங்களும் நானும் **அதிர்ஷ்டசாலிகள்.** பரிசுத்தமும் வல்லமையும் அவரிடமே காணப்படுகிறது. அவர் மாத்திரமே பரிசுத்தர் என தேவ வசனத்தில் வெளிப்படுத்துகிறது.

பிரியமானவர்களே! இன்று நீங்கள் வாசித்த எமது ஆரம்ப வசனம் **2 நாளாகமம் 26:6** இல் யூதாவை அரசாண்ட ராஜா உசியாவைப் பற்றியதாகும். **உசியா ராஜாவாகிற** போது பதினாறு வயதாயிருந்தான். ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமில் அரசாண்டான். தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்து தேவனை தேட மனதாயிருந்தான். அவன் கர்த்தரைத் தேடினபடியால் அவனுடைய கீர்த்தி எகிப்தின் எல்லை எங்கும் எட்டினது. அவன் **பெலன் கொண்டான்.** அவன் பெலன் கொள்ளவும், **ஜெயங் கொள்ளவும்.** புதுமையான வல்லமை அவனிலே கிரியை செய்தது என வேதம் கூறுகிறது. அவனுக்கு இவ் வல்லமை கிடைத்தது **எப்படி? யாரால்? என்று நீங்கள் அறிவீர்களா?** எனதும், உங்களதும் தேவனாலேயாகும். ஏனெனில் **2 நாளாகமம் 26:5** இல் அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார் என்று சொல்லுகிறது. ஆகையால் நீங்களும் தைரியமாயிருங்கள். உங்கள் வாழ்விலோ உங்கள் பிள்ளைகளின் வாழ்விலோ **முன்னேற்றமில்லை, செல்வம் செழிப்பில்லை,** விருத்தியில்லை என எண்ணி கவலைப்படாதிருங்கள். நீங்கள் உசியா ராஜாவைப் போல் கர்த்தரைத் தேடுங்கள். அப்போது கர்த்தர் காரியங்களை வாய்க்கச் செய்து **ஆசீர்வதிப்பார், உயர்த்துவார்.**

தேவ பிள்ளைகளே! நீங்கள் தேவனுக்கூடாக மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்குங்கள். நீங்கள் உசியா ராஜாவைப் போல் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருங்கள். **முழு இருதயத்தோடு** தேவனைத் தேடுங்கள். தேவனுடைய ஆசீர்வாதத்தின் மூலம் உங்கள் **வாழ்வின் முன்னேற்றமான செல்வ செழிப்பான பெரிதான விருத்தியான ஆசீர்வாதம்** பெருகுமானால் உங்களை பார்க்கிறவர்கள், உங்கள் வாழ்வில் காணப்படும் **உத்தமத்தைக் காண்கிறவர்கள்** உங்களை ஆசீர்வாதமாக வைத்திருக்கும் தெய்வத்தைக் குறித்து அறிந்து கொள்ளவும் தேடவும், பின்பற்றவும் தொடங்குவார்கள். ஆகையால் நீங்கள் **ஆத்துமீக** காரியங்களில் ஈடுபட்டு தேவனுடைய வழிகளில் நடப்பீர்களேயானால் **உங்கள் திறமைகள், ஞானம், அறிவு,** இவைகளை அதிகரிக்கச் செய்து உங்களை சகலவற்றிலும் **ஆசீர்வதித்து மேன்மையாக வைப்பார். வெற்றி தரும் நாள்!**

**ஜெபம்**

என்னை நேசிக்கும் அன்பு தேவனே! உசியா ராஜாவைப் போல் உங்களை உண்மையோடும், உத்தமத்தோடும் உங்களைத் தேடி அதன் மூலம் உங்கள ஆசீர்வாதத்தை பெற்று மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கி உங்கள் நாமத்தை மகிமைப்படுத்தத்தக்கதாய் உங்கள் அனுக்கிரகத்தை கட்டளையிடும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் . ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"பூரணரட்சிப்பும் ஞானமும் அறிவும் உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும்; கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம்." (ஏசாயா 33:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஓகஸ்ட் 19

செவ்வாய்

## தேவ ஜனமே நியாயத் தீர்ப்புக்கு ஆயத்தமா?

இன்றைய வேதவாசிப்பு

செப்பனியா 03
ஆகாய் 01

"கர்த்தரோ என்றென்றைக்கும் இருப்பார்; தம்முடைய சிங்காசனத்தை நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தம் பண்ணினார்." (சங்கீதம் 9:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இன்றும் ***ஜீவனுள்ள தேவனின் ஆசீர்வாதத்தைப் பெற்று உள்ளும், புறமும் மகிழ்ச்சியால் நிரம்பி ஆத்துமாவில் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வாழ்த்துகின்றேன்.*** வானமும், பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என கூறும் தேவ வார்த்தைகள், தேவனால் படைக்கப்பட்ட ***இவ் மண்ணுலகம் ஒரு நாள் அழிந்து இல்லாது போய் விடும்*** என்று தெளிவுப்படுத்துகிறது. ஆயினும் தேவன் தாமே சதாகாலங்களிலும் ராஜாவாக இருப்பார். என்பது சத்தியம் இயேசுகிறிஸ்து கூறுகிறார். மெய்யான தேவனின் வார்த்தைகள் ஒழிந்து போவது இல்லையென்றும் அது தேவ வார்த்தைகள் நித்திய காலங்களிலும் செயல்பட்டுக் கொண்டே இருக்கும் என்பதாக கூறப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் தலைப்பு வசனம் கூறுகிறது கர்த்தரோ என்றென்றைக்கும் இருப்பார். தம்முடைய ***சிங்காசனத்தை நியாயத் தீர்ப்புக்கு ஆயத்தம் பண்ணினார் என்று உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!*** உங்கள் பரலோக பிதாவானவர் உங்களோடு நித்திய நித்தியமாய் இருப்பார். அவர் உங்களை விட்டு தூரப் போகவோ, கைவிடவோ மாட்டார். ஆயினும் அவர் உலக மக்களை ***நியாயந்தீர்க்கும்படியாய்*** பூலோகத்தை நோக்கி இறங்கும்படியாய் தம்முடைய ***சிங்காசனத்தை ஆயத்தம் பண்ணுகிறார்.*** அதி சீக்கிரமாய் வரப் போகிறார். இம் மண்ணுலகில் ஜீவிக்கின்ற மனிதர்கள் மத்தியில் தேவனை அறிந்து அவரை சேவிக்கும் அவருடைய பிள்ளைகள் பாக்கியம் பெற்றோரே. ஏனெனில் நாமனைவரும் தேவனுடைய வருகையை குறித்து அவருடைய ***நியாயந்தீர்ப்பின்*** நாளைக் குறித்து அறிந்திருக்கிறவர்களாயிருக்கிறோம். நியாயந்தீர்ப்பின் நாளில் சகல மனிதர்களின் முன் அவர் ***நியாயாதிபதியாக*** நிற்கும் அத் தருணத்தில் நாமும் அவர் முன்பாய் நியாயந்தீர்க்கும்படியாய் குற்றமற்றவர்களாய் கறைதிரையற்றவர்களாய் ***பரிசுத்தவான்களாக*** நிற்கும்படி நாம் ஆயத்தப்படு-கிறவர்களாய் இருக்க நாம் அறிந்தவர்களாய் இருக்கிறோம். அதன் நிமித்தம் ***வலப்பக்கமாய், இடப்பக்கமாய் சாயாதபடி நித்திய ஜீவனைக்குரிய வழியில் முன் நோக்கி கடந்து செல்ல கடைசி வரை பொறுமையோடு ஓட அறிந்தவர்களாய் இருக்கிறோம்.***

அன்பார்ந்தவர்களே! உங்களை சிருஷ்டித்த கர்த்தர் உங்களை தம்மிடம் அழைத்து உங்களை புதுப்படைப்பாய் மாற்றி, உங்களை பரலோகம் அழைத்துச் செல்லும்படி ***புதியபாதைகளை*** அமைத்துக் கொடுத்து அவரின் சித்தத்தை நிறைவேற்றிவிட்டார். அவரின் கற்பித்தலின்படியும், பரிசுத்த ஆவியானவர் காட்டும் பரிசுத்த வழியிலும் ஆத்மீக வழிப் பயணத்தில் தொடாந்து செல்லுங்கள். ***உங்கள் பரிசுத்தமோ, நன்மையோ, தீமையோ, சகல கிரியைகள், வார்த்தைகள், சிந்தனைகள், இரகசியமான*** பாவங்கள் அனைத்தும் வெளிப்படும் அந்த நியாயந்தீர்ப்பின் நாளுக்காக ஆயத்தப்படுங்கள் இன்று ***பாக்கியமுள்ள ஆசீர்வாதமான நாள்!***

ஜெபம்

என் அன்பின் தேவனே! நியாயம் தீர்க்கும் நியாயாதிபதியானவரே. இன்றைய நாளிலும் நான் பரிசுத்தவனாய் வாழவும் நியாயந்தீர்ப்பின் நாளிலே உங்கள் முன்பதாக நிற்கத்தக்கதாக எங்களை பரிசுத்த ஆவியானவருக்கூடாக வழிநடத்தும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும்." (பரி:லூக்கா 21:35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் **20**
புதன்

## கர்த்தாவே நீரே எம் பெலனானவர் !

இன்றைய வேதவாசிப்பு

ஆகாய் 02
சகரியா 01

**"என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்."** (சங்கீதம் 73:26)

அன்பானவர்களே! எம் பெலனானவரான ஜீவிக்கின்ற தேவன் **இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் இன்றைய தினம் ஆறுதலின் நாளாக நிகழும்படி வாழ்த்துகின்றேன்.** தினந்தோறும் நீங்கள் சந்திக்கும் பிரச்சினைகள், வேதனைகள், சோதனைகள், துன்பங்கள், சவால்கள் நிமித்தமாக உங்கள் ***உள்ளம் அதைரியமடைந்து உங்கள் சரீரம் பெலவீனப்பட்டு*** காணப்படுகிறீர்களா? ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களை **தேற்றுபவராக** உங்கள் அருகில் இருக்கிறார். இக் காலை வேளையில் அவரின் அன்பினால் உங்களை ஆறுதல்படுத்தும்படி தேவ செய்தியை அளித்திருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! சங்கீதக்காரரான தாவீது ***சங்கீதம் 73:26*** இல் சொல்லுகிறார் ***"என் மாம்சமும் இருதயமும் மாண்டு போகிறது. தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்."*** என்று ஆகவே அவரைப் போல நாமும் பெலவீனமடைந்தவர்களாக சிறு பிராயத்திலிருந்து வாலிப பிராயத்தை அடையும் வரை ***எம் சரீரம் பெலவுள்ள, வீரியமுள்ளதான அச்சயம் பயமில்லாத தைரியமுள்ள சரீரமாக வளர்ச்சியடைகிறது.*** ஆயினும் நடுத்தரம் வயதடையும் போது எமது சரீரத்தின் பெலன் நாளுக்கு நாள் குறைவடைகிறதை எம்மால் உணர முடியும். சில வேளகளில் நாம் ***ஞாபசக்தி*** குறைவினால் எங்கள் ***சிந்தனை, நினைவுகளெல்லாம் நிலைதடுமாறுகின்றது.*** மேலும் வேறு சில மாற்றங்களும் சரீரத்தில் ஏற்படுகிறது ***தலைநரைத்தல், பார்வை குறைவு, ஞாபக மறதி*** போன்றவைகள் ஏற்படுகின்றன. அதனால் மனிதன் வயோதிப பருவத்தை அடைந்து விட்டார் என உணர்கிறோம். மனிதனுடைய உருவமே வயோதிபத்தை வெளிபடுத்துவதாய் இருக்கிறது. மனிதனின் உருமாற்றம் ஒன்று போல் இருப்பினும் ***சரீர பெலன்*** தாங்கும் சக்கி ஒருவருக்கொருவர் வேறுபட்டதாய் இருக்கிறது. ***கடுகளவு பிரச்சினையைக் கூட மலையைப் போல் ஒரு சிலருக்கு தென்படும்.*** தம் பிரச்சினைகளை குறித்து சிறு காரியங்களை பெரிதாக நினைத்து கவலைப்பட்டு சமாதானத்தை இழந்து சரீர சுகமிழந்து மகிழ்ச்சியின்றி மனமடிவுள்ளவர்களாக இருப்பார்கள். இதனால் வாழ்வில் துன்பங்கள் பெருகி ***மனக்கசப்புகள்*** ஏற்பட்டு நீங்கள் பெலவீனமடைந்து ***அதைரியமடையலாம்*** நீங்கள் கலக்கமடையாதீர்கள்.

தேவ பிள்ளைகளே! பரலோக பிதாவின் பிள்ளைகளாகிய உங்களுக்கு **இருதய பெலன், *சரீர* பெலன் இயேசுவே** ஏனெனில் தேவ ஆவியானவர் தேற்றரவாளனாக அவரே உங்கள் உள்ளங்களில் வாசம் பண்ணி **உங்கள் இருதயங்களை *பெலப்படுத்தி*** எல்லா பெலவீனங்களையும் மாற்றி சரீர, மனபெலவீனங்கள் யாவையும் நீங்கச் செய்து பலவானாக மாற்றுவார். உலகத்தோர் பிரச்சினைகள் கவலையினால் விழுந்து போவார்கள். ஆனால் **தேவ பிள்ளைகளாகிய நீங்கள் பிரச்சினைகள் நீங்க நாளுக்கு நாள் தேவ பெலத்தால் புதுபெலனும், புதுசக்தியும் பெறுவீர்கள்.** அவரே எமது பெலன் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார் **இன்று *வெற்றிச் சிறந்த நாள்!***

**ஜெபம்**

என் அன்பின் இயேசுவே! நீரே என் பெலன் நாள் தோறும் என் வாழ்வில் வரும்
சகல இன்னல்களிலும் எனக்கு துணையாயிருந்து பெலனளித்து சரீர மன
பெலனை தரும்படியும் ஆவியானவரால் என்னை
நிரப்பும்படியும் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்." (ஏசாயா 41:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் **21**

வியாழன்

# எம் உள்ளத்தை ஆளுகை செய்யும் இயேசுகிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு

சகரியா அதி: 02 - 03

**"நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்? இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல."** (கலாத்தியர் 5:7,8)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! நித்தியமும் அழிவில்லாமையுமான சர்வ வல்லமையுள்ள ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் மகிமையின் **நாமத்தினால் தேவ பிள்ளைகள் யாவரும் இன்றைய தினத்திலும் சகல ஆசீர்வாதங்களையும் உரிமையாக்கி கொள்ளும்படியாக பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.** என்னையும், உங்களையும் தமக்குரிய பரிசுத்த பிள்ளைகளாய் உலகத்திலிருந்து வேறு பிரித்து கொண்ட எம் படைப்பின் தேவன் **அன்று போல் நேற்றும், இன்றும், என்றும் உண்மையுள்ளவராய்** இருக்கிறார். வேதவசனம் இதை உறுதிப்படுத்துகிறது. உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார். இவ்வார்த்தையின்படி தேவ பிதா உண்மையுள்ளவர் என்பது நிச்சயம்.

பிரியமான தேவ பிள்ளைகளே! ஆத்மீகர்களாகிய நீங்கள் யாவரும் உங்கள் உள்ளத்தால் தூண்டப்படும், எல்லா காரியங்களையும் **செயல்படுத்த முயற்சிக்காதீர்கள்.** உங்கள் ஆத்துமீக வாழ்க்கைக்கு நன்மையானதா? தீமையை கொண்டு வருமா? என சிந்தித்து ஆலோசனை செய்து முடிவு செய்யுங்கள். நீங்கள் ஆத்துமாவைக் குறித்து **சிந்தனையின்றி செயற்படுவீர்களானால்** அக் காரியங்கள் உங்கள் ஆத்மீக வாழ்க்கையில் **அபாயகரமான, பயங்கரமான** காரியங்களை உங்கள் வாழ்க்கையில் விளைவிக்கக்கூடும். இன்றைய தின பிரதான தேவ வார்த்தையான **கலாத்தியர் 5:7,8இல் "நீங்கள் நன்றாய் ஓடினீர்களா! சத்தியத்திற்கு கீழ்படியாமல் போக உங்களுக்கு தடை செய்தவன் யார்? இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல"** என்று கூறுகின்றது. ஆகையால் உங்கள் உள்ளத்தின் சமாதானத்தை அகற்றக்கூடும் அல்லது சமாதானத்தை பெற முடியாது **துரதிஷ்டமான கெட்ட சிந்தனைகளை** உண்டு பண்ணும் சிந்தனையான தூண்டுதல்களை **எதிர்த்து நில்லுங்கள்.** இவைகள் எமக்கு விரோதமான சாத்தானால் வருகிறது. நீங்கள் இவைகளுக்கு இடமளித்து ஏமாந்து போகாதீர்கள். ஆத்துமாவை இழந்து போகாதீர்கள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் உள்ளம் உங்களை ஆளுகை செய்ய **இடமளிக்காதீர்கள்.** உங்கள் உள்ளத்தின் சிந்தனைகளுக்கு இடம் கொடுத்து **அடிமையாகி விடாதீர்கள்.** உங்கள் உள்ளத்தின் கிரியைகள் யாவும் உங்களது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்படியாக பார்த்துக் கொள்ளுங்கள். **"எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்?"** என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. **உங்கள் இருதயத்தை ஆளுகை செய்ய இயேசுவுக்கு இடங்கொடுங்கள்.** அவரே உங்களுக்கு அரணாக இருந்து எம் இருதயம் எனும் **சிங்காசனத்தினில் அமர்ந்து** எங்கள் உள்ளத்திற்கு கொண்டு வருகிற எல்லாவித சத்துருவின் கிரியைகளையும் மேற்கொள்ள தேவன் அதிகாரமுள்ள வல்லமையை கொடுத்து உங்களை ஆசீர்வதிப்பார். **இன்றைய நாள் வெற்றியின் நாள்!**

**ஜெபம்**

என் இருதயத்தை ஆளுகை செய்யும் என் அன்பு நேசரே! என் இருதயத்தில் அமர்ந்து என்னை ஆளுகை செய்யுங்கள். என் ஆத்துமாவிற்கு கேடு விளைவிக்க கொண்டு வரும் தீய போதனைகளை நிர்மூலப்படுத்தி என்னை பாதுகாத்துக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில். -ஆமென்-

**வேத வாக்குத்தத்தம்**

"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்." (நீதிமொழிகள் 4:23 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒகஸ்ட் 22
வெள்ளி

## உங்கள் ஜெபத்தின் குரலுக்கு செவி கொடுக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
சகரியா
அதி: 04 – 05

**"...நான் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர், நான் அவர்களுக்குச் செவிகொடுப்பேன்." (சகரியா 10:6)**

எனக்கன்பான தேவனுடைய பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவனின் வல்லமையுள்ள **பரிசுத்த நாமத்தால் இக்காலைப் பொழுதினிலே புதிய நாளான இன்று சுபநாளாக அமையும்படி ஆசீர்வதிக்கிறேன்.** இலங்கை தேசத்து ஜனங்கள் மத்தியில் நீங்கள் மிகப் பெரிய **அதிர்ஷ்டசாலிகள்** என தேவனுக்குள் சந்தோஷத்துடன் கூறுகிறேன். ஏனெனில் **உங்கள் குரலுக்கு செவி கொடுக்கும் ஜீவனுள்ள தேவன் உங்களோடிருக்கிறார்.** நீங்கள் இயேசுவே! பிதாவே! என அழைக்கும் ஒவ்வொரு விணாடியிலும், நொடிப்பொழுதிலும் உங்கள் சத்தத்தை கேட்டு அதற்கு பதில் அளிக்கும் படைப்பின் தேவன் அவரே!

பிரிமானவர்களே! உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! நீங்கள் எவ்வேளையிலும் **தேவனை நோக்கி** இயேவே என் தேவனே என்றோ அன்பின் பிதாவே என்று அவரை நோக்கி அழைக்கும் போது உங்கள் குரலுக்கு **அவர் பதில் நேரடியாக கொடாவிட்டாலும்,** அவரது குரல் உங்கள் செவிகளுக்கு கேட்டகாவிட்டாலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **உங்கள் ஜெபத்தின் குரலுக்கு செவி கொடுக்கிறார்** என்பதை **முழு உள்ளத்துடன் விசுவாசியுங்கள்.** ஏனெனில் வேத வசனம் "**விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்**" என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் எமது தேவைகளை அவரிடம் எப்படி கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும் எமக்கு கற்றுத் தந்திருக்கிறார். "**நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்.**" என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான் என்று அவருடைய தேவ வார்த்தையிலிருந்து விளங்குகிறது. நாங்கள் பரலோக பிதாவை நோக்கி எமது சத்தத்தை குரலை, **உயர்த்தி ஜெபிக்கும் போது** அவரது ஒரே புத்திரனாகிய இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தினால் கேட்க வேண்டும் என வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்பான தேவ பிள்ளைகளே! என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எமக்கு வாக்குத் தத்தமான **பொருத்தனையை** கொடுத்துள்ளார். ஆகையால் **நாம் அவரின் நாமத்தை உச்சரித்து ஜெபிக்கும் போது எம்மை சிருஷ்டித்த இயேசுகிறிஸ்து எம் விண்ணப்பங்களை கேட்டு நிச்சமாய் பதிலளிப்பார் என்பது உறுதி** ஆகையால் அவர் தராதிரம் பாராது உங்களை அதிகமாக நேசிக்கிற அவர் எமக்கு செவி கொடுக்கும் அன்பின் தேவனாயிருப்பதால் வாய்விட்டு முழு உள்ளத்தோடு கேட்கும் போது எதையும் அவர் மறுப்பதில்லை. ஆகவே நீங்கள் எதை குறித்தும் **கலங்க வேண்டாம். உள்ளத்தின் விருப்பங்களை நிறைவேற்றும்** வல்லமைமிக்க தேவன் எம்மோடிருக்கிறார். **இன்றைய நாள் ஜெயத்தின் நாள்!**

**ஜெபம்**

என் அன்பின் பரலோக தேவனே! உங்கள் கண்கள் பரத்திலிருந்து என்னை நோக்கிக் கொண்டிருக்கிறபடியால். என் குரலை கேட்கிறவராயிருக்கிறீர்கள் என் ஆவியில் உணர்கிறேன். நன்றி இயேசுவே! விண்ணப்பிக்கும் என் குரலை கேட்டு என் தேவைகள் யாவையும் சந்தித்து ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை." (ஏசாயா 59:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் 23 சனி

# நமக்காக இரண்டாம் முறையாக பூமிக்கு வருகை தரும் இயேசுகிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு

சகரியா அதி: 06 – 07

**“அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்.”** (பரி.லூக்கா 21:27)

தேவனால் உண்டான அன்பினால் இணைக்கப்பட்ட தேவ பிள்ளைகளே! **எம்மை சிருஷ்டித்த கர்த்தருடைய ஜீவனுள்ள நாமத்தினால் இன்றைய தினமதிலும் சகல ஆசீர்வாதங்களும் உங்களை வந்தடையும்படி ஆசீர்வதிக்கிறேன்.** பரலோக பிதாவின் ஒரே பேறான மனுஷக்குமாரன் இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவனுள்ளவராக கிரியை செய்கிறவராய் இருக்கிறார் என விசுவாசிக்கிற நீங்களனைவரும் **அதிர்ஷ்டசாலிகளே!** ஏனெனில் **மரணத்தை ஜெயம் கொண்டு உயிரோடு எழுந்த இயேசுகிறிஸ்து** இரண்டாவது முறையாக தம் சீஷர்களுக்கு காட்சி அளித்த போது தமது சீஷனான தோமாவை நோக்கி, தோமாவே! நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய் காணாதிருந்தும் **விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்** எனக் கூறினார்.

தேவ பிள்ளைகளே! எங்கள் இரட்சகர் இன்றும் எங்கள் மத்தியில் ஜீவிக்கிறவராய் கிரியைகளை நடப்பிக்கிறவராய் இருப்பதையும், மறுபடியும் அவர் எடுத்துக் கொள்ளப்பட்ட வானத்திலிருந்து பூமிக்கு இறங்கி வருவார் என்பதை, **விசுவாசித்து** நடக்கும் நீங்கள் பாக்கியவான்களாக இருக்கிறீர்கள். என்பது உறுதி ஏனெனில் இன்றைய எமது பிரதான வசனம் **பரி.லூக்கா 21:27**இல் வெளிப்படுத்துகிறது. **“அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின் மேல் வருகிறதைக் காண்பார்கள் என்பதாக.”** இயேசுகிறிஸ்து பொய் சொல்ல மனுஷ புத்திரனல்ல **அவர் பரிசுத்தர்.** அவர் கூறினார், சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று. ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மறுபடியும் பூமிக்கு வருவது எதற்காய் என்பதை நீங்கள் அறிவீர்களா? உங்களை தம்மோடு பரலோகம் அழைத்துச் செல்ல, பரலோகத்திலே உங்களுக்காக ஆயத்தப் படுத்தப்பட்டிருக்கும் **ஸ்தலத்திற்கு** உங்களை அழைத்துக் கொண்டு போகவே அவர் மீண்டும் வரவிருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! நீங்கள் **தேவனை விசுவாசித்து கட்டளைகளை, கற்பனைகளை, சத்தியத்தை** உங்கள் வாழ்வில் கடைப்பிடித்து ஆத்துமாவிலே அவர் வருகைக்கு ஆயத்தப்படுங்கள். பூமிக்குரிய மாம்சத்துக்குரியவைகள் உணவு, உடை, நகைகள், அலங்காரப் பொருட்கள், சொந்த வீடு சொத்துக்கள், வாகனங்கள், காணி, பூமி, உயர்வு பதவி மோகம், பெருத்த வருமானங்கள், ஆடம்பரமான வாழ்க்கை இவைகளினிமித்தம் **பேராசை கொண்டு** உங்கள் இருதயத்தில் பாரம் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். **நீங்கள் ஆத்துமாவை ஆதாயப்படுத்தக் கூடிய காரியங்களில் அதிகமாக அக்கறைக் கொண்டு செயல்படுங்கள். பரலோகத்திற்குரியவைகளை தேடுங்கள். “முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும்.”** என்று எம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எமக்கு உறுதி மொழி அளித்துள்ளார். அவர் சொன்னதை நிறைவேற்றுபவர். அவரை பின் தொடர்ந்து சென்று பரலோக ராஜ்ஜியத்தின் மகிமையைப் பெற்றுக் கொள்ளுங்கள். **இன்றைய நாள் ஜெயத்தின் நாள்!**

**ஜெபம்**

அன்பின் பிதாவே! மனுஷக்குமாரனாகிய இயேசுகிறிஸ்து மீண்டும் பூமிக்கு மறுபடியுமாக வருகை தந்து இப் பூமியின் தோன்றும் நாளிலே மகிமையின் ராஜாவாகிய உம்மை பரலோகத்தில் காணும்படி பரிசுத்தமாக வாழ என்னை வழி நடத்தும்படி ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

“ஆகையால், என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.” (1 தெசலோனிக்கேயர் 4:16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் 24 ஞாயிறு

## தேவன் உங்களுடன் இருப்பதால் பராக்கிரமசாலிகளாக இருக்கிறீர்கள் !

இன்றைய வேதவாசிப்பு

சகரியா அதி: 08 – 09

**"அவர்கள் யுத்தத்திலே தங்கள் சத்துருக்களை வீதிகளின் சேற்றில் மிதிக்கிற பராக்கிரமசாலிகளைப்போல இருந்து யுத்தம்பண்ணுவார்கள்; கர்த்தர் அவர்களோடேகூட இருப்பார்; குதிரைகளின்மேல் ஏறிவருகிறவர்கள் வெட்கப்படுவார்கள்."** (சகரியா 10:5)

கிறிஸ்துவுக்குள் பிரியமான என் அன்பு தேவ பிள்ளைகளே! அகிலத்தையும் ஆளுகை செய்யும் ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் வெற்றிச் சிறந்த நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** உங்களை சிருஷ்டித்தவரும், உங்களை உருவாக்கி உயிர்கொடுத்தவருமான உங்கள் படைப்பின் தேவன் தாமே உங்களை சகல வழிகளிலும் **பாதுகாத்து சகாயம் புரிபவராக இருக்கின்றார்.** அவர் படைத்ததோடு நின்று விடவில்லை உங்கள் **வாழ்க்கை முழுவதும் ஜெயம் பெற்று மகிழ்ச்சியாய் இருக்குமாறு செயல்படுத்தி நடத்துபவராக இருக்கிறார்.** ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! தேவன் முதன் முதலாக உருவாக்கி உயிர் கொடுத்த முதல் மனிதனாகிய ஆதாமும் அவனுக்கு துணைவியாக சிருஷ்டித்த ஏவாளையும் அவர்களுக்கென உருவாக்கிய ஏதேன் எனும் தோட்டத்திலே **அவர்களை சகல செழுமையுடன் ஆசீர்வாதமாக வாழச் செய்தார். சாத்தான்** அவர்களை ஏமாற்றி தேவ கட்டளையை தேவனுக்கு **கீழ்படியாமல்** இருக்க அவர்களை தூண்டினான். இதனால் கீழ்படியாமையின் **பாவத்தில் வீழ்ந்து தேவ சாயலை இழந்து போனார்கள்.** அதுமாத்திரமல்ல ஏதென் எனும் சிங்காரவனத்திலிருந்தும் துரத்தப்பட்டுப் போனார்கள். அன்றும் இன்றும் மனிதர்களின் எதிரியாக சாத்தான் எங்கள் வாழக்கைக்கு விரோதமாகவும் எம் ஆசீர்வாதங்களுக்கு விரோதமாக பாதிப்புகளை ஏற்றடுத்திக் கொண்டிருக்கிறான் என்பது உண்மை. **சாத்தான் கண்களுக்கு புலப்படாத அரூபியாக இருப்பதால்** எமக்கு விரோதமாகவும் எம்மோடு அருகில் வசிப்பவர்களின் மூலமாக எங்கள் வாழக்கைப் பயணத்தின் **தன் தந்திரமான காரியங்களை** செயல்படுத்த தொடங்கி விடுவான். அவர்களுக்கூடாக எமக்கு பலவிதமான இன்னல்களான பிரச்சினைகள், துன்பங்கள், வேதனைகள், சோதனைகள் போன்றவைகளை ஏற்படுத்தி **அழிவுகளைக் கொண்டுவர முயற்சிப்பான்.**

தேவ பிள்ளைகளே! உங்களைப் பெலப்படுத்துகிறவர் உங்களோடிருந்து உங்களை பெலப்படுத்தி உங்கள் ஆத்மீக பயணத்திலே பாதிப்புகளை உண்டு பண்ணும் **சாத்தானை வெட்கப்பட்டு போகச் செய்வார்.** அவர் எம்மோடிருந்து எம்மை வல்லமைப்படுத்தி எம் மகிழ்ச்சியை, சுகத்தை, ஆசீர்வாதத்தை **திருடும் சாத்தானை மேற்கொண்டு ஜெயம் பெறச் செய்வார்.** இன்றைய தினம் தலைப்பு வசனத்தில் இதையே வெளிப்படுத்தியுள்ளது. **"அவர்கள் யுத்தத்திலே தங்கள் சத்துருக்களை வீதிகளின் சேற்றில் மிதிக்கிற பராக்கிரமசாலிகளை போலிருந்து யுத்தம் பண்ணுவார்கள். கர்த்தர் அவர்களோடே கூட இருப்பார்."** என்று நீங்கள் அதைரியமாயிருங்கள். உங்கள் விரோதிகளுக்கு எதிராக உங்கள் கரங்களை நீட்டாதீர்கள். கபடற்றவர்களாய் பரிசுத்த இருதயத்தோடு உண்மையுள்ளவராய் இருங்கள். தேவன் உங்களோடிருந்து உங்களை **பெலவானனாக, பராக்கிரமசாலியாக மாற்றுவார். வெற்றியின் நாள்!**

**ஜெபம்**

என்னை பெலப்படுத்துகிற ஜீவனுள்ள தேவனே! இன்றும் என்றும் என் ஆத்மீக வாழ்விற்கு விரோதமாக செயல்பட என்னை தூண்டும் சாத்தானுடைய காரியங்களை விட்டு விலக என்னோடிருந்து என்னை பெலனாக மாற்றி ஜெயமடையச் செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (சகரியா 4:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஜீவ மன்னா | நீங்கள் பொல்லாங்கனை ஜெயங் கொண்டவர்கள் என்பதை அறிவீர்களா? | இன்றைய வேதவாசிப்பு |
|---|---|---|
| ஒகஸ்ட் 25 திங்கள் | | சகரியா அதி: 10 – 11 |

**"...நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்."** (1 யோவான் 2:13)

சகல கிருபையையும் பெருகச் செய்கிறவரும், எங்களை காக்கிறவருமான ஜீவனுள்ள தேவாதி தேவனான **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் நந்நாளாக அமையும்படி வாழ்த்துகின்றேன்.** இன்றைய தேவ செய்தியின் முதல் வசனத்தை நோக்கி பார்த்தால் **"நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன்"** என்பதாக. நீங்கள் ஜெயம் பெறுவீர்கள் என்று கூறப்படவில்லை **ஜெயம் பெற்று விட்டீர்கள், பொல்லாங்கனை வீழ்ச்சி அடையச் செய்து விட்டீர்கள்** என்பதாக அர்த்தம் கொள்ளப்படுகிறது. **நீங்கள் ஜெயம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.**

தேவ பிள்ளைகளே! பொல்லாங்கன் என்று அழைக்கப்படுவது யார் என அறிவீர்களா? **அவன் தான் சத்துருவான பிசாசானவன்!** ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் மனுஷகுமாரனாக மனிதர்கள் மத்தியில் உலாவிய நாட்களில் தமது பரலோக தேவனை **நோக்கி ஜெபிக்கும் போது அவரது விண்ணப்பம் இப்படியாக இருந்தது. "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல் நீர் அவர்களை தீமையினின்று காக்கும்படியாய் வேண்டிக் கொள்கிறேன்."** ஆகையால் **நீங்கள் கலங்காதிருங்கள்!** அவர் எம் பாவங்கள், சாபங்கள் நிமித்தமாக சிலுவையில் ஜீவபலியாக தம்மை ஒப்புக்கொடுத்தார். அவருடைய பரிசுத்த இரத்தத்தினால் எம்மை மீட்டு விலைக்கிரயமாக அளித்து எம்மை மீட்டுக் கொண்டார். நாம் **பிசாசானவனுடைய அடிமைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும் தற்போது நாம் விலக்கப்பட்டவர்களாக இருக்கிறோம்.** பிசாசின் சகல வல்லமைகளை மேற்கொள்ளும்படியாக இயேசுகிறிஸ்து சிலுவையில் பலியாகி இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் வல்லமையை எமக்கு அளித்துள்ளார்.

அன்பார்ந்தவர்களே! அரசாங்க தொழிற்துறையில் உயர் அதிகார மட்டத்திலிருப்பவர்கள், தனியார் துறைகளில் உயர் அதிகாரிகள் இவர்களுக்கு வாகன வசதி, வதிவிட வசதி மற்றும் அநேக வசதிகள் தொழில் நிறுவனங்களால் வழங்கப்படுகிறது. ஆயினும் அப்பதவிகள் அவர்களை விட்டு விலகும் போது **அவர்களுக்கு கிடைத்த அனைத்து சலுகைகளும் அவர்களை விட்டு நீங்கிப் போகும்.** இதை நாம் நன்கு அறிந்தவர்களாய் இருந்தாலும் இச்சலுகைகள் அனைத்தையும் நன்கு அனுபவித்தே விட வேண்டும் என்ற **பேராசையுடன் மதியீனமாக செயல்படுகிறார்கள்.** இதை போலவே **சாத்தானும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான்.** காரணம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எம்மை இரட்சித்து சாத்தானின் வல்லமையை அழிக்க எமக்கு அதிகாரம் அளித்துள்ளார் என்பதை அறிந்தும் **எங்கள் வாழ்க்கையிலும், சரீரத்திலும் பாதிப்புக்களை உண்டு பண்ண முயற்சிக்கிறான்.** ஆனாலும் சாத்தானை ஜெயங்கொண்ட ஆவியானவர் உங்களில் வாசம் பண்ணுகிறபடியால் பொல்லாங்கன் உங்களை ஜெயங் கொள்ள முடியாது. **உங்களுக்கே வெற்றி. உங்களுக்கு வெற்றிச் சிறந்த நந்நாள்!**

ஜெபம்

அன்பின் தேவனே! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக பொல்லாங்கனின் கிரியைகளின் இருந்து என்னை மீட்டு ஆவியானவர் என்னில் வாசம் பண்ணவும் சாத்தானை ஜெயங் கொண்டு வாழ நீங்கள் தந்த அனுக்கிரத்திற்காய் ஸ்தோத்திரம். மேலும் என்னை பெலப்படுத்தும்படி ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பிள்ளைகளே! நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள் நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் நானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்" (1 யோவான் 3:7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஓகஸ்ட் **26**
செவ்வாய்

**தேவ வார்த்தைகளைக் கைக்கொண்டு வாழ்வினிலே ஜெயத்தை சுவீகரித்துக் கொள்ளுங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு

சகரியா
அதி: 12 – 13

**"நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்."** (பரி:மத்தேயு 7:24)

அன்பார்ந்த என் தேவனுக்குரியவர்களே! உண்டாக்கினவரும், உருவாக்கினவருமான ஜீவிக்கின்ற தேவனுடைய வல்ல நாமமாகிய **இயேசு என்னும் நாமத்தினால் இந்நாளில் நன்மைகளையே பெறும்படி வாழ்த்துகின்றேன்.** இனிதான காலைப்பொழுதிலும் இந்த **ஜீவ மன்னா** நாளாந்த தேவ செய்தியின் தேவ வார்த்தைகளை வாசிக்க **ஆவலாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள். பரி.மத்தேயு 7:24**இல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இப்படிச் சொல்கிறார் "**நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்**" என்று. இதன்படி பார்த்தால் தேவ வசனத்திற்கூடாக கடந்து போகும் எம் வாழ்க்கை பெலத்தால் உயர்வடையும்.

தேவ பிள்ளைகளே! தினந்தோறும் தேவ வார்த்தைகளை வாசித்து அதன்படி நடக்கும் **நீங்கள் புத்தியுள்ள மனுஷன்** மேலும் அவர் **என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்** என்பதாக கூறுகிறார். உங்கள் வாழ்க்கை **சங்காரமாகாதபடி** காத்துக் கொள்ளும்படியாக தேவனானவர் தேவ வசனத்தின் மூலமாக **உங்களுக்கு அவசியமான வெளிப்பாடுகளை அருளியிருக்கிறார்.** தேவன் அருபியாக இருப்பினும் **ஜீவனுள்ளவராய்** இருக்கிறார். நீங்கள் தேவனையும் அவரது வார்த்தைகளையும் விசுவாசித்து நடவுங்கள். ஆயினும் நீங்கள் தேவனை விட அதிகமாய் உங்கள் அருகில் இருப்பவர்களை உங்களுடன் பழகுபவர்களை விசுவாசித்து வாழ்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். "**நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டு விடுங்கள்.**" என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஏனெனில் அவர்கள் உங்களை மறந்து விடுவார்கள், தூரமாக விலகி போவார்கள். அப்போது **உங்கள் உள்ளம் கலங்கி தவித்துப் போகும். உங்கள் வாழ்க்கை வீழ்ச்சியடைந்து போகக் கூடும்.**

தேவ பிள்ளைகளே! **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக**! தேவனுடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு அதன்படி ஜீவிப்பீர்களேயானால், மனிதர்கள் உங்களோடிருப்பினும் அல்லது தூரமாயிருந்தாலும் அவர்களுடைய **ஒத்தாசைகள், உதவிகள்** உங்களுக்கு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் உங்கள் வாழ்க்கை சீர்கெட்டுப் போகப் போவதில்லை. ஏனெனில் **நீங்கள் நம்பி விசுவாசித்து வாழ்வது மனிதர்களை அல்ல தேவனை நோக்கி அல்லவா?** உங்கள் கண்களை ஏறெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அவருடைய ஜீவ வார்த்தைகளை அல்லவா பற்றிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகையால் உங்களுடைய பெலன் தேவனே! உங்களுக்கு தோல்வியில்லை, துக்கமில்லை உங்களுக்கு **சதாகாலங்களிலும் ஜெயமே! ஜெயத்தின் நாள்!**

**ஜெபம்**

என் அன்பின் இயேசுவே! உங்கள் வார்த்தைகளுக்கூடாக ஜீவ பெலனை அதிகரித்து என் வாழ்க்கை முழுவதுமாக உங்களுக்கூடாக உயர்வடைந்து ஆசீர்வாதமாக வாழ எனக்கு உதவி, ஒத்தாசை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்." (யாக்கோபு 1:25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஜீவ மன்னா | தேவ சித்தம் எம்மில் நிறைவேற இடமளிப்பது எம் முதற்கடமை ! | இன்றைய வேதவாசிப்பு |
|---|---|---|
| ஓகஸ்ட் 27 புதன் | | சகரியா 14<br>மல்கியா 01 |

**"அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்."** (பரி.லூக்கா 1:38)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! வல்லவரும் நல்லவருமான ஜீவிக்கின்ற எம் பரலோக பிதாவின் **இயேசுகிறிஸ்து என்னும் இனிய நாமத்தினால் இன்றைய தினம் நல்ல நாளாக அமையும்படி வாழ்த்துகின்றேன்.** உயிரோடிருக்கிற நித்திய தேவனை அறிந்து **ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டவர்களே!** நீங்கள் பாக்கியவான்கள்! உங்கள் வாழ்வினை தேவனுடைய கரத்திற்கு ஒப்பிவித்து அவரது பிள்ளையாக ஜீவிப்பீர்களேயானால் உங்கள் வாழ்வின் **சகல தேவைகளையும் அவரது சித்தத்தின்படி திட்டமிட்டு அபூர்வமாக மிக உயர்ந்த மட்டத்தில் தேவன் நிறைவேற்றுவார்.**

தேவ பிள்ளைகளே! மனிதர்களாகிய எம் வாழ்வினைக் குறித்து நாம் வைத்திருக்கும் திட்டங்களைப் பார்க்கிலும் எம் தேவன் எம்மைக் குறித்து வைத்திருக்கும் **திட்டங்களும், யோசனைகளும் உயர்வானதும், அற்புதமானதுமாகும்** என அவரின் வேத வார்த்தையிலிருந்து வெளிப்படுத்தப்படுகிறது. மேலே கொடுக்கப்பட்ட தேவ வசனத்தில் இயேசுவின் தாயாராகும்படி தேவனால் நியமிக்கப்பட்ட **மரியாள்** என்னும் கன்னிகைக்கு சொல்லப்பட்டதாகும். மரியாள் என்ற இக் கன்னிப் பெண் **தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு** என்னும் பெயர் கொண்ட **மனிதனுக்கு திருமணம் செய்ய நியமனம் செய்யப்பட்டிருந்தாள்.** அவளுக்கு கர்த்தரிடம் இருந்து ஒரு செய்தியை கொண்டு வந்தான் காபிரியேல் என்னும் **தேவ தூதன்.** அந்தச் செய்தியானது இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு **இயேசு என்று பெயரிடுவாயாக** என்றார். அதற்கு மரியாள் தேவ தூதனை நோக்கி இது எப்படியாகும் புருஷனை அறியேனே என்றாள்.

தேவ பிள்ளைகளே! இவ் வார்த்தைகளை தேவ சித்தத்தைக் குறித்து தெரிந்துக் கொண்ட உடனே மரியாள் தன்னைக் குறித்து சிந்தியாதபடி **தேவ சித்தம் தன்னிலே நிறைவேறும்படியாய் தன்னை தேவனுக்கு முன்பாக தாழ்த்தினாள்.** மனிதர்களாய் தனக்கு ஏற்படப்போகும் **அவமானம், வெட்கம், புறக்கணிப்பு** இவைகளை குறித்து அவள் கவலைப்படவில்லை. தேவ சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்தபடியால் **அவள் ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக** மாறினாள். ஆகையால் **நீங்களும் கலங்காதிருங்கள்!** உங்கள் வாழ்விலும் தேவ சித்தம் நிறைவேற்றப்படும் போது அநேக சஞ்சலங்கள், வேதனைகள், உபத்திரவங்கள் சோதனைகளை சந்திக்க, அனுபவிக்க நேரிடலாம். ஆயினும் நீங்கள் அவற்றை **மகிழ்ச்சியோடு மனஉறுதியுடன்** கடந்துவந்து தேவசித்தத்தை ஆண்டவரின் விருப்பத்தை நிறைவேறச் செய்வீர்களேயானால் அவர் உங்கள் விருப்பத்தை நிறைவுச் செய்து **சம்பூரணமாக ஆசீர்வாதத்தால்** உங்களை பெருகச்செய்து மகிழச்செய்வார். இன்றைய **நான் பாக்கியமான நாள்!**

**ஜெபம்**

என்னை உருவாக்கிய பரமபிதாவே! உங்கள் திரு சித்தம் என்னில் நிறைவேறும்படியாய், என்னை உங்கள் கரத்தில் ஒப்பு கொடுக்கிறேன். எனனை உங்கள் விருப்பம் போல் வழி நடத்துங்கள், துன்ப வேதனைகளை தாங்க பெலன் தந்து உங்கள் விருப்பத்தை செய்ய எனக்கு அருள் தருமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்." (பரி:மத்தேயு 6:33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் **28**
வியாழன்

## உங்கள் கசப்பான வாழ்க்கையை மதுரமாக மாற்றும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
மல்கியா
அதி: 02 – 03

**"மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று."** (யாத்திரகாமம் 15:25)

தேவனுக்குள் மிகப் பிரியமான என் அன்புக்குரிய தேவ பிள்ளைகளே! எம்மை நிலைநிறுத்துகிறவரும், வழி நடத்துகிறவருமான **உயிருள்ள கர்த்தர் இயேசுகிறிஸ்துவின் மதுரமான நாமத்தில் இன்றும் இனிய நாளை சுவீகரித்துக் கொள்ளும்படியாக வாழ்த்துகின்றேன்.** உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் சகல **மாராவின் கசப்பான, காரியங்கள்** யாவும் இயேசுவின் நாமத்தில் மறைந்து **மதுரமாக மாறுவதாக!** உங்கள் தேவனாகிய கர்த்தர் சகலவற்றையும் படைத்து ஆளுகை செய்து பரிபாலித்து வரும் **சர்வ வல்லமையுள்ள தேவனாயிருக்கிறார்.** அவர் **வானத்திலும், பூமியிலும், சமுத்திரங்களிலும், கடையாந்தரங்களையும் சிருஷ்டித்தவர்.** அவரால் இவ்வுலகத்தில் செய்ய முடியாத காரியம் ஒன்றுமேயில்லை என்று. அவர் எதை செயல்படுத்த விருப்பமாய் இருக்கிறாரோ அதை **நிறைவேற்றுபவராயிருக்கிறார்.** ஆகவே நீங்கள் **கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! அவர் இஸ்ரவேலின் தேவனாக விளங்குவது போல் உங்கள் தேவனாயிருக்கிறார். இன்றும் அவ்வாறே இருக்கிறார். இஸ்ரவேலர்கள் செங்கடலைக் கடந்து **சூர் எனப்படும் வனாந்திரத்தை வந்தடைந்தார்கள். வனாந்தரத்திலே தண்ணீர் இல்லாமல் தாகத்தினால் மூன்று தினங்கள் வரை கஷ்டப்பட்டார்கள்.** அவர்கள் மாரா எனும் இடத்திலே நீரைக் கண்டார்கள். ஆனால் அந்த நீர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு **பருக முடியாதபடி கசப்பானதாக இருந்ததாக** வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இஸ்ரவேல் ஜனங்கள் **மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து என்னத்தைக் குடிப்போம்** என்றார்கள். அப்போது மோசே கர்த்தரை நோக்கி கூப்பிட்டான். அந்த வார்த்தைகளே இன்றைய நாளின் பிரதான தேவ செய்தியாக காணப்படுகிறது. அவரை அழைத்த **மோசேக்கு பதில் அளித்த தேவன் கசப்பை மாற்றினார்.**

அன்பார்ந்தவர்களே! இஸ்ரவேல் ஜனங்களின் முதல் பிரச்சினை அவர்களின் தாகத்தை தீர்த்துக் கொள்ள முடியாதபடி தண்ணீர் **கசப்பாக இருந்ததே!** மோசே கர்த்தருக்கு விண்ணப்பித்த போது அவர் ஒரு மரத்தை காண்பித்தார். அதை அவன் தண்ணீரிலே போட்டவுடனே அது **மதுரமான தித்திப்பான தண்ணீராக மாறியது.** இஸ்ரவேலர்கள் மோசேயை பார்த்து தமது பிரச்சினைகளை கூறினார்களேயன்றி **அவர்களை எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டு வழி நடத்தி வந்த கர்த்தரை அவர்கள் எண்ணிப் பார்க்கவோ, அல்லது நினைத்துப் பார்க்கவோ இல்லை.** ஆயினும் அவர்களின் தாகத்தை தீர்க்க தேவன் அவர்களுக்கு **உடனடியாக பதில் கொடுத்தார். கசப்பை மதுரமான தித்திப்பாக மாற்றின** அதே கர்த்தர் இன்றும் உங்களோடிருக்கிறார். உங்கள் வாழ்க்கையில் காணப்படும் கசப்பான பிரச்சினைகளையெல்லாம் சீர்படுத்தி தீர்வை பெற்றுக் கொள்ள மனிதர்களை நாடாமல் **தேவனை நோக்கி காத்திருங்கள்.** அவரை நோக்கி **ஜெப விண்ணப்பங்களை ஏறெடுங்கள்.** அப்போது ஒரு நொடிப் பொழுதினிலே உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்ள முடியும். **இன்று ஜெயம் தரும் நல்ல நாள்!**

**ஜெபம்**

அன்பின் பரலோக தேவனே! மோசேயின் குரலுக்கு உடனே பதில் அளித்து
கசப்பை தித்திப்பாக மாற்றி அருள் புரிந்தவரே! இன்றைய நாளிலும் அவ்வாறே
என்னோடிருந்து எம் குரலை கேட்டு எம் கசப்பான பிரச்சினைகள் யாவையும்
ஒரு நொடிப் பொழுதிலே மதுரமாக மாற்றும்படி
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

**வேத வாக்குத்தத்தம்**

"அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்." (ஏசாயா 65:24 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஓகஸ்ட் 29
வெள்ளி

தேவ சித்தத்தை நிறைவேற்றுபவர்கள் என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்கள் !

இன்றைய வேதவாசிப்பு
மல்கியா 04
பரி:மத்தேயு 01

**"உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்."**
(1 யோவான் 2:17)

அன்பான என் தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள ஒரே தேவன் மகா பரிசுத்தமுள்ளவரான **இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் இப்புதிய உதயக் காலையில் புதிய நாளிலே புதுக் கிருபையில் மகிழ்ந்திருக்கும்படியாய் வாழ்த்துகின்றேன்.** இப் புவிதனில் பல இன மனிதர்கள் வசிக்கிறார்கள். பல இனத்தவர்கள் ஒருமித்து வாழ்ந்த போதிலும் சில வேளைகளில் ஒரு இன ஒரே மொழி பேசும் மனிதர்கள் மத்தியிலும் வேறு இன மொழியில் பேசுபவர்கள் அநேகர் மத்தியில் **குழப்பங்கள் சண்டைகள், யுத்தங்கள், ஏற்படுகிறதை நாம் காண்கிறோம்,** கேள்விப்படுகிறோம். இவைகள் ஏற்படுவது மனிதர்களுடைய **துஷ்ட கிரியைகளில் நிமித்தமே** என்பதை சத்திய வார்த்தைகள் வெளிப்படுத்துகிறது.

தேவ பிள்ளைகளே! உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! மனிதர்களை படைத்த ஜீவனுள்ள தேவன் இன்றும் ஜீவிக்கின்றார். கிரியை செய்கிறார் என்றும், மனிதர்கள் செய்யும் சகல காரியங்களுக்கும் அவர் பலன் அளிக்கிறார் என்றும். **ஆத்துமீக ஆசீர்வாதம், லௌகீக ஆசீர்வாதம், தேவ வல்லமை இவைகளை பெறும்படியாக நாம் என்ன செய்ய** வேண்டும் என்பதையும் அறிந்து கொண்டவர்களாய் இருப்பவர்கள் **யாவரும் பாக்கியவான்கள்.** ஏனெனில் நீங்கள் உலகில் துஷ்டகிரியைகள், பாவக்கிரியைகளுக்கு அடிமையாகாது ஜீவிக்க அறிந்தவர்களாய் இருக்கிறீர்கள். அதே போல் உலக மாமிச கிரியைகளின் மத்தியில் **ஜீவிப்பவர்களுடன் சிநேகம் கொள்ளாது,** உலக ஆசை, இச்சைகளை தவிர்த்து தேவகட்டளைகளுக்கு **கீழ்படிந்து நடக்கிறவர்கள் தேவ சித்தத்தை செயல்படுத்துகிறவர்கள் சதாகாலங்களிலும் நிலைநிற்பவர்களாகும்.** இதையே இன்றைய பிரதான தேவ வசனம் அறியத் தருகிறது.

தேவ பிள்ளைகளே! தேவ வார்த்தைகளால் எமக்கு அருளப்பட்ட வேதாகமத்தை அனுதினமும் வாசித்து அவரது விருப்பம் என்ன என்பதை அறிந்து ஜீவிப்பவர்களாய் இருக்க வேண்டும். உங்கள் ஆண்டவர் உங்கள் வாழ்க்கையில் ***அநேக சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள்,*** இவற்றை ஏற்படுத்தவில்லை. உங்கள் ஆத்துமாவிற்கு பாரத்தை உண்டாக்கவில்லை. தேவ வசனத்தை வாசித்தறிந்து ஆத்மீக காரியங்களை அறிந்துக் அவைகளுக்கு **கீழ்படிந்து நடந்து தேவ சித்தத்தை செய்வீரகளேயானால் தேவ இராஜ்ஜியத்தில் சதாகாலங்களில் மகிழ்ந்திருப்பீர்கள்,** கர்த்தருக்கு சமீபமாக அவரோடு தேவ சமூகத்தில் களிகூறும் பாக்கியத்தை பெறுவீர்கள். **இன்று ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

தேவனே! உங்கள் விருப்பம் நான் பரிசுத்தமாய் வாழ்வதே! அதை நிறைவேற்றி பரிசுத்தமாய் ஜீவித்து உங்கள் இராஜ்ஜியத்தில் சதாகாலங்களிலும் மகிழ்ந்திருக்க அருள் தாருங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;" (பரி.யோவான் 11:25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒகஸ்ட் 30
சனி

**தேற்றப்படும்படியாக தேற்றரவாளனை எமக்களித்த இயேசுகிறிஸ்து !**

இன்றைய வேதவாசிப்பு
பரி:மத்தேயு
அதி: 02 – 03

**"நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்."** (பரி:யோவான் 16:7)

கிறிஸ்துவுக்குள் மிகப் பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் உங்களை இன்றும் நல்ல நாளைப் பெற்று மகிழ்ந்திருக்கும்படி வாழ்த்துகின்றேன்.** உலகப் பிரகாரமாக ஜீவிப்பவர்களிடமாவது ஆத்துமீகர்களாக ஜீவிப்பவர்களிடமாவது **எப்படி இருக்கிறீர்கள் என விசாரித்தால்** சுகமாய் இருக்கிறேன், நன்றாக இருக்கிறேன், அல்லது இயேசுவின் நாமத்தினால் மகிழ்ச்சியாய் சுகமாய் இருக்கிறேன் என்று **பதில் பெறுவது அபூர்வமாக,** மிக அரிதாகவே இருக்கிறது. இப்பூமியில் வாழும் சகலருமே பிரச்சினை, கஷ்டம் துன்பம் போன்ற பல்வேறுப்பட்ட உபத்திரவங்கள் **வேதனைக்கு மத்தியில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! உலக மனிதர்களைப் போல் அல்ல, உங்கள் கண்ணீரை காண்கின்ற **தேவன் உங்களோடிருக்கிறார்.** உங்கள் ஜெபங்களை கேட்கிறவராய் உங்கள் அருகில் இருக்கிறார். வேதம் கூறுகிறது யூதாவின் ராஜாவாகிய **எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு** ஏதுவாயிருந்த போது ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து நீர் உமது வீட்டுக் காரியங்களை ஒழுங்கு படுத்தும், நீர் பிழைக்க மாட்டீர், மரித்துப் போவீர் என்று கர்த்தர் சொல்கிறார் என்றார். அப்போது **எசேக்கியா தன் முகத்தைச் சுவர்புறமாகத் திருப்பிக் கொண்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான் மனம் கசிந்து அழுதான்.** இதைக் கண்ட கர்த்தர் மறுபடியும் ஏசாயாவை திருப்பி அனுப்பி உன் **விண்ணப்பத்தைக் கேட்டேன் உன் கண்ணீரைக் கண்டேன்.** இதோ நான் உன்னை குணமாக்குவேன். மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய். உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன். ஊன்னையும் இந்த நகரத்தையும் அசிரியா ராஜாவின் கைக்கு தப்புவிப்பேன் என்று சொல்லச் சொன்னார். அன்று இவ்வாறு எசேக்கியா ராஜாவை தேற்றினவர் இன்று உங்கள் அருகிலிருக்கிறார். ஆகையால் நீங்கள் துன்பப்பட்டு **கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! **பரி.யோவான் 16:7**இல் இயேசுகிறிஸ்துவாகிய ஆண்டவர் சொல்கிறார். அவர் போதிக்கிறது எமக்கு **பிரயோஜனமாயிருக்கும்.** அவர் போகா விட்டால் தேற்றரவாளன் எம்மிடத்தில் வர மாட்டார். என்று நான் போவேனாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் என்று கூறினார். நீங்கள் ஆண்டவராகிய **இயேசுவை பின்பற்றினீர்களேயானால் தேவ பிள்ளையாக ஜீவிப்பீர்களேயானால் தேற்றரவாளன் உங்களோடிருந்து இயேசுகிறிஸ்துவின் மூலமாக உங்களை தேற்றுவார். வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் தேற்றரவாளனை எனக்கு அனுப்பியபடியால் நன்றி!
என் ஜெபத்தை கேட்டு என் கண்ணீரை துடைத்தபடியால்,நன்றி!
ஆவியானவருக்கூடாக என்னை தேற்றி என்னை ஆறுதல்படுத்தி வழி நடத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் . ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்." (பரி:யோவான் 14:18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஒகஸ்ட் 31 ஞாயிறு

## உங்கள் சஞ்சலமும் தவிப்பும் விலகி ஓடும்படி செய்யும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

பா:மத்தேயு அதி: 04 – 05

**"அப்படியே கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்பிவருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்."** (ஏசாயா 51:11)

என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் மகிமையின் நாமத்தினால் சுப நாளைப் பெற்று மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** இம்மாதத்தின் இறுதிநாளாகிய இன்று எம் பாதையெல்லாம் செவ்வையாக்கி **வழி நடத்தி ஆசீர்வதித்த தேவனை ஸ்தோத்தரிப்போம்.** இப்பூமியில் வாழும் சகல மனிதர்களும் **சுயாதீனமாகவும்** தம் வாழ்வின் எதிர்பார்ப்புகள் யாவும் நிறைவேறி **மிக மகிழ்ச்சியாக வெற்றியுடன் வாழ வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.** அவர்களது ஆசையும் அதுவே. இவைகள் எத்தனை பேருடைய வாழ்வில் நிறைவேறுகிறது என்பதை நான் அறியேன். ஏனெனில் அநேக ஜனங்கள் அனுதினமும் தமது வாழ்க்கைப் பயணத்தை **வேதனையுடனும், துன்பத்துடனும்** கடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

அன்பானவர்களே! நாம் சிறிது கூட எதிர்பாராத சந்தர்ப்பங்கள் எமது வாழ்வில் ஏற்பட்டு **எம் வாழ்வில் துன்பத்தையும் வேதனைகளையும்** ஏற்படுத்தி விடுகிறது. இதன் மூலம் அநேகருடைய வாழ்க்கையில் கடைசி வரையில் இத் துன்பம் விலகாது போய் விடுகிறது. **அநேகர் ஏழ்மை, வறுமை, துன்பம், வேதனையில் வாடியே மரித்து விடுகிறார்கள்.** ஆயினும் நீங்கள் பயப்படாதிருங்கள்! உங்கள் வாழ்க்கையின் போராட்டங்கள் யாவும் நீக்கி **சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும்** அளிக்க வல்ல ஒருவர் இருக்கிறார். அவர் தான் உங்களை உருவாக்கி உயிர் கொடுத்த படைப்பின் தேவன். நீங்கள் அவரை விசுவாசியுங்கள். உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்புக் கொடுங்கள். இன்று முதல் உங்கள் வாழ்க்கையில் காணப்படும் எல்லா **பெரு மூச்சுகளும்** உங்களை விட்டு ஓடிப் போகும். ஏனெனில் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக் களிப்புடன் சீயோனுக்குத் திரும்பி வருவார்கள் என்று இன்றைய செய்தியின் தலைப்பு வசனம் கூறுகிறது.

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** உங்கள் வாழ்வில் காணப்படும் **பிரச்சினை, வேதனை, துன்பம்** எல்லாம் சில தினங்களில் மாறி போய் விடும். ஆனால் இருதயத்தின் வேதனை **உள்ளத்தை ஆட்கொள்ளும் துயரம் அதி சீக்கிரத்தில் மாறாததாய்** இருக்கிறது. அது அடிக்கடி உங்களை வாட்டி வதைக்கும். இதிலிருந்து விடுதலை வேண்டுமாயின் உங்கள் உள்ளத்திற்கு ஆறுதல் வேண்டுமாயின் **உங்கள் சிருஷ்டிகரிடம் உங்கள் இருதயத்தை ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள்.** ஆவியானவர் தாமே ஒரு தெய்வீக சமாதானத்தை தந்தருளுவார். உங்கள் உள்ளம் மனமகிழ்ச்சியடையும். **இன்றைய நாள் மனமகிழ்ச்சியான நாள்!**

**ஜெபம்**

என் அன்பு இயேசுவே! என் வாழ்வினை என் இருதயத்தை உங்கள் கரங்களில் ஒப்படைக்கிறேன். துயரமும், சஞ்சலங்களும் ஓடிப் போகவும் என் வாழ்வில் நித்திய மகிழ்ச்சி கடந்து வரச் செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் . ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு ஆறுதல் செய்தார்; சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள்மேல் இரக்கமாயிருப்பார்." (ஏசாயா 49:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் அற்புத கிரியைகள்

## 15 வருட எஸ்மா நோய் சுகம்!



தனுஜா தில்ஹானி
உனமுல்ல

15 வருடக் காலமாக எஸ்மா நோயினால் வேதனைப்பட்டேன். வைத்தியப் பரிகாரம் பெற்றும் சுகங் கிடக்காகமற் போனது. ஒரு நாளைக்கு 15 மாத்திரைகள் வீதம் நான் பாவித்த போதும் நிரந்தர சுகம் கிடைக்கவில்லை. இன்னுமாக ஒரு நாளைக்கு இரண்டு முறை காலையும், மாலையும் இன்ஹெலர் பாவிக்க வேண்டியிருந்தது. மாலை நேரம் குளித்தாலும், வீட்டு வேலைகள் செய்து களைப்புற்ற வேளையிலும் எனது நோயின் வேதனை அதிகமாகிவிடும். அப்படியான தினங்களில் நோயின் வேதனை அதிகரித்து வைத்திய பரிகாரம் பெற வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறவும் வேண்டியிருந்தது.

இப்படியாக இருக்கின்ற போது சகோதரிக்கூடாக சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனையைக் குறித்து எனக்கு அறிந்து கொள்ளக் கிடைத்தது. அதில் பங்கு பற்றினேன். சனிக்கிழமை ஆராதனையில் தொடர்ந்து கலந்துக் கொண்ட போது எனது எஸ்மா நோய் முற்றிலுமாக சுகமானது. இப்பொழுது சுகம் பெற்று எட்டு மாதங்களாகுவதோடு எந்தவிதமான வைத்தியப் பரிகாரமும் இன்றி இயேசுகிறிஸ்துவின் இரக்கத்தோடு சுகமாக நான் வாழ்கின்றேன். 15 வருட எஸ்மா நோயை சுகப்படுத்திய இயேசுவே உங்களுக்கு மகிமை உண்டாவதாக!

## 3 வருட புற்று நோய் சுகம்!



சியாமலி பீரிஸ்
ரத்மலான

3 வருடத்திற்கு முன்னர் எனது இடது மார்பகத்தில் கட்டிகள் ஏற்பட்டு நான் அதற்காக வைத்தியப் பரிகாரம் பெற்றுக் கொண்டேன். வைத்தியப் பரிசீலனைகளில் பிறகு அது புற்று நோயென வைத்தியர்கள் தீர்மானித்தார்கள். சத்திரச் சிகிச்சை மூலமாக அதை அகற்றினார்கள். அதன் பிறகு ஒரு வருடத்தின் பின்னர் என் இடது கமக்கட்டில் தேசிக்காய் அளவில் சிறிய கட்டியொன்று ஏற்பட்டது. அதையும் சத்திர சிகிச்சையினால் அகற்றினார்கள். அதன் பிறகு ஒரு வருடத்திற்கு பின்னர் மீண்டுமாக அதே போன்று கட்டியொன்று அதே இடத்தில் ஏற்பட்டது.

அதையும் அகற்றும்படியாக மீண்டும் சத்திரசிகிச்சை செய்து அகற்ற ஆயத்தப்படுகையில் இயேசுகைவிடார் பணியகத்தின் தெய்வீக சுகமளிக்கும் ஆராதனையைக் குறித்தறிந்து அதில் கலந்துக் கொண்டேன். சனிக்கிழமை 4 நாட்கள் சுகமளிக்கும் ஆராதனையில் கலந்து கொண்ட போது இடது கையிலிருந்த கட்டி மறைந்து விட்டது. வைத்திய பரிகாரம் பெற்றுக் கொள்ள சென்றபோது புற்று நோய்க்கலங்கள் என் உடம்பில் இல்லையென வைத்தியர் கூறினார். சத்திரசிகிச்சை இல்லாமல் எனது புற்று நோய்க்கட்டியை மறைந்து போகப்பண்ணி 3 வருட புற்று நோயை குணப்படுத்திய ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவை எனது முழு உள்ளத்தோடு ஸ்தோத்தரிக்கிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிரயோஜனத்திற்காக இயேசு கைவிடார் பணியகத்திற்கூடாக



**SMS மாத்திரம்**
**071-0714011**

புதிதான ஊழியமொன்றை **தற்போது ஆரம்பித்துள்ளோம்!**

அன்பார்ந்தவர்களே! கையடக்க தொலைபேசிக்கூடாகவே அனைத்து காரியங்களையும் நிறைவேற்றுகின்ற யுகத்தில் வாழ்கின்ற ஆத்துமீகர்களாகிய உங்களுக்கு ஆத்மீக தேவைகளின் நிமித்தம் எங்கள் சபைக்கு நீங்களும் SMS குறுஞ்செய்தி எழுதி அனுப்ப வசதியாக புதிய வழிமுறையொன்றை ஆயத்தப்படுத்தியுள்ளேன். இது ஓகஸ்ட் மாதம் முதல் செயல்படும்.

## இந்த ஊழியமானது அழைப்பின்றி

- ஜீவமன்னா தினத்தியானங்கள் உங்கள் இல்லத்திற்கு அனுப்ப, உங்கள் முகவரிகளை SMS மூலமாக எங்களுக்கு அனுப்புங்கள்.
- ஜீவமன்னா தினதியானங்கள் மற்றவர்களுக்கும் அனுப்பும் படியாக அவர்களது முகவரிகளை SMS செய்திக்கூடாக எங்களுக்கு அனுப்புங்கள்.



உபயோகத்திற்காக: உங்கள் பெயரும் தொலைபேசி இலக்கமும் அவசியம்.


- ஜீவமன்னா தியானங்களைக் குறித்த பிரச்சினைகளுக்கு பதில் பெற்றுக்கொள்ள உங்கள் பிரச்சினையை SMS செய்திக்கூடாக எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.
- எங்களுடைய ஊழியம் சம்பந்தமான எந்த விபரத்தினையும் பெற்றுக்கொள்ள தேவையான காரியத்தைக் குறித்து SMS செய்திக்கூடாக விசாரியுங்கள்.

☑ உங்களுக்கு பதில் கிடைப்பது SMS செய்திக்கூடாக மாத்திரமே

☑ ஒவ்வொரு நாள் காலையிலும் SMS செய்தியை பரிசீலித்து பதில் அனுப்பப்படும்.

☑ ஜீவமன்னா தினத்தியானங்கள் அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இது சம்பந்தமாக உங்கள் ஆலோசனைகள் எதுவாயினும் எழுதி எமக்கனுப்புங்கள். அதை SMS செய்தி மூலமாக எழுதுங்கள். அப்படியே உங்கள் சந்தோஷமான காணிக்கைகள், காணிக்கைகள், ஜீவமன்னா வாசகக்கட்டணங்கள் சம்பந்தமான அறிவித்தல்களையும் கொடுக்கலாம். காசுக்கட்டளை எனின் ஏ.ஜே. ஜோசப் கிராண்ட்பாஸ் தபால் காரியாலயம், பணம் அனுப்புவதாயின் ஏ.ஜே. ஜோசப் கொமர்ஷல் வங்கி கணக்கு இலக்கம் 8076982701. உங்கள் ஜீவமன்னா தினத்தியானங்களுக்கான வாசகக் கட்டணங்கள் அனுப்பும் போது வாசக இலக்கத்தை குறிப்பிட மறந்து விடாதீர்கள்.



**இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக!!!** இயேசு துணை!!!

**35 வது வெளியீடு**

போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.

**விலாசத்தை அனுப்பவும்** R/N:- CME/003/12/NPO


## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.

☎ 011-2334865 ✆ 071-4922929

✉ arulandu.joseph@gmail.com 🌐 www.jesusnf.org



இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14. ஜீவ மன்னா குட் நியூஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org